# காட்டாறு


பருவம்: 1 புனல்: 2 நவம்பர் 2014 தனிச்சுற்றுக்கு நன்கொடை: ரூ.20



## காதலுக்குக் காவலானவூர் காவலாண்டியூர்

அரபிக்கடலோரம் முத்தப்புயல்.... நாடெங்கும் அன்பு மழை...





புதுடில்லி 'பார்வர்ட் பிரஸ்' ஏடு தாக்கப்பட்டது! அசுரக்கூட்டத்துக்கு எதிராக ஆரியத் தாண்டவம்!!

# காட்டாற்றின் உள்நோக்கம்

**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**சட்ட ஆலோசனைக்குழு**
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரத் தொடர்பு**
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

**விற்பனைத் தொடர்பு**
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

**சந்தா தொடர்பு**
அ. கிருட்டிணகுமார்
97882 97428

**வடிவமைப்பு, அச்சு**
செல்வக்குமார்
BS Graphics, Chennai

**அலுவலக நிர்வாகம்**
சி. இராவணன் 97868 89325

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு**
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல் 624003
kaattaaru2014@gmail.com

காட்டாறு இரண்டாவது இதழை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பர்களுக்கு,

காட்டாற்றின் முதல் இதழுக்கு உங்களைப் போன்றோர் அளித்த வரவேற்பும், ஆதரவும் தொடர்ச்சியாக ஏட்டை நடத்தவேண்டும் என்ற கடமையுணர்ச்சியை எங்களுக்கு உருவாக்கியது. எதிர்ப்புகள், ஏளனப்பேச்சுக்கள், டாஸ்மாக்கிய மிரட்டல்கள் ஆகியவைகளையும் காட்டாறு சந்தித்தது. காட்டாறு ஏட்டை வாங்கக்கூடாது என்று சிலர் பேசத்தொடங்கினர். தனது வீட்டில், தங்களது படிப்பகத்தில் - காலைக்கதிரையும், தினமலரையும், இந்துவையும் பணம்செலுத்தி வாங்கிப் படிப்பவர்கள்தான் காட்டாறை வாங்கக்கூடாது எனப் பேசியுள்ளனர். இவர்களைக் கருத்துரீதியாக உருவாக்க முயன்ற தலைவர்களின் உழைப்பு வீணாகிவிட்டதே என்று வேதனைப்படும் அதே வேளையில், இதுபோன்ற எதிர்ப்புகள்தான் எங்களை உற்சாகப்படுத்தியுள்ளன. “வெளியீட்டுவிழா” என்ற ஒரு சடங்கு, சம்பிரதாயத்தைக்கூட நடத்தாத எங்களுக்கு ஒரு நல்ல விளம்பரத்தைத் தேடிக்கொடுத்த தோழர்களுக்கு மனங்கனிந்த நன்றிகளைக்கூறி, தொடர்ச்சியாக இதுபோல எங்களை உற்சாகப்படுத்துமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.

ஆதரவோ, எதிர்ப்போ, விமர்சனமோ எதுவும் எழுத்தில் எங்களுக்கு வரவில்லை. அதேசமயம், திராவிடர் உடை என்ற கட்டுரைக்கு ஆரோக்கியமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. பல தோழர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் விமர்சனங்களை வைத்தனர். வேஷ்டி என்பது தமிழர் உடையா? இந்துக்களின் உடையா? என்ற விவாதத்தை அக்கட்டுரை தொடங்கியிருக்கிறது. தமிழ்த்தேசியர்களிடமிருந்து வரும் என்று எதிர்பார்த்த விமர்சனங்கள், பெரியாரைப் படித்தவர்களிடமிருந்து வந்தது குறித்துதான் மிகவும் வருந்துகிறோம்.

குறிப்பாக ஒரே ஒரு பதிலை மட்டும் தற்போது தருகிறோம். திராவிடர் உடை என்ற கட்டுரை காட்டாறுக்காக எழுதப்பட்ட கட்டுரை அல்ல. ஓராண்டுக்கு முன்னர் 2013 அக்டோபர் 20 ல் நடந்த திராவிடர் வாழ்வியல் விழாவில் வெளியிடப்பட்ட ‘கருந்திணை பண்பாட்டு மலரில்’ வெளிவந்த கட்டுரையைத்தான் மறுபதிப்பு செய்திருந்தோம். ஓராண்டாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைமையகத்தில் அந்த கருந்திணை மலர்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் சுற்றுப்பயணங்களில் ஓராண்டாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. கருந்திணைமலர் குறித்தும், குறிப்பாக ‘திராவிடர் உடை’ என்ற கட்டுரை குறித்தும் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்கள், தி.வி.க வின் அதிகாரப்பூர்வ வார ஏடான புரட்சிப்பெரியார் முழக்கத்தில் மிகத்தெளிவாக விமர்சனம் எழுதி, வெளியிட்டுள்ளார். அதை அப்படியே இங்கே தருகிறோம்.

## கருத்துச் செறிவு மிக்க திராவிடர் பண்பாட்டு மலர்

சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகம், திருப்பூரில் அக்.20 ஆம் தேதி நிகழ்ந்த திராவிடர் வாழ்வியல் விழா, உணவு விழாவையொட்டி 'திராவிடர் பண்பாட்டு மலர்' ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

'வாஸ்து' மூடநம்பிக்கை, பெயர் சூட்டல் குறித்து - கொளத்தூர் மணி கட்டுரைகளும், சங்க இலக்கியங்களிலேயே பார்ப்பனியம் ஊடுருவியதை விளக்கும் - விடுதலை இராஜேந்திரன் கட்டுரையும் நல்ல கருத்து விளக்கங்களை முன் வைக்கின்றன.

**'திராவிடர் உடை' என்ற கட்டுரை, வேட்டி சேலை அணிவதும், இந்துமதப் பண்பாடு என்று சங்கராச்சாரி கூறுவதை எடுத்துக்காட்டி, அதையே தமிழர்களின் அடையாளமாக தமிழ்ப் பண்பாடு பேசுவோரையும் சுட்டிக்காட்டி, தமிழர் அடையாளம் இந்துப் பண்பாடா என்ற கேள்வியை எழுப்புகிறது. உணவு மற்றும் உடையைப் பொறுத்தவரை மதம், கலாச்சாரப் பார்வையைத் தவிர்த்துவிட்டு, அவரவர் வசதி விருப்பத்தைச் சார்ந்தது என்பதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும். பெரியார், உடையில் பெண், ஆண் வேறுபாடு இருப்பதே தேவையில்லை என்றார்.**

**மாட்டுக்கறி' உணவு பற்றிய மீனா மயிலின் அரிய கட்டுரை, மாற்றுத் திரைப்படம் பற்றிய பாமரன் சிந்தனை என்று மலர் பக்கத்துக்கு பக்கம் கருத்துச் செறிவுடன் விளங்குகிறது. பெரியார் பண்பாட்டுப் புரட்சியின் வாழ்வியல் கூறுகளை விரிவாக அலசும் திராவிடர் பண்பாட்டு மலர் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து, பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.**

மலர் கிடைக்குமிடம் : தலைமையகம், திராவிடர் விடுதலைக் கழகம், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், சென்னை-600041. பேசி : 044-24980745 பக். : 175; விலை : ரூ.150. கருந்திணை : திண்டுக்கல். பேசி : 9786889325

புரட்சிப் பெரியார் முழக்கம் - 25.12.2013

முக்கியமாக 2013 நவம்பரில் தலித்முரசு ஏடு வெளியிட்ட தலித் பண்பாட்டுச் சிறப்பிதழில் கருந்திணை மலர் - தலித் பண்பாட்டு மலராக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டுள்ளது. புரட்சிப்பெரியார்முழக்கம், தலித்முரசு போன்ற ஏடுகளின் அங்கீகாரம்தான் நாங்கள் சரியான பெரியாரியல் பார்வையில் எழுதுகிறோம் என்பதை எங்களுக்கு உணர்த்துகின்றன.

இதை ஒப்புக்கொள்ள முடியாது 'திராவிடர் உடை' போன்ற கட்டுரைகள் எங்களுக்கு உடன்பாடு உடையவை அல்ல என்று கூறுபவர்கள், விமர்சனம் எதுவாக இருப்பினும் விரிவாக எழுத்தில் அனுப்புங்கள். காட்டாற்றில் பதிவு செய்கிறோம். உரிய விளக்கங்களோடு பதிலையும் தர ஆயத்தமாக இருக்கிறோம். காட்டாறு முழுக்க முழுக்க விவாதங்களை உருவாக்க உள்ள ஏடுதான். உங்கள் விமர்சனங்கள் வழியான உங்களது பங்கேற்புதான் அதன் நோக்கத்தை முழுமையாக்கும்.

மேலும் காட்டாறுக்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்றும் ஒரு விமர்சனம் எழுந்தது. உண்மை தான். காட்டாறுக்கு ஒரே உள்நோக்கம்தான். பெரியார் காலத்தில் நூற்றுக்கணக்கான சிற்றிதழ்கள் வெளியாகிக்கொண்டிருந்தன. வலைப்பூக்கள், இணையதளங்கள், முகநூல்களின் வருகைக்குப் பிறகு அப்படி ஒரு பண்பாடு இருந்ததே இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. ஆனாலும் அச்சு ஊடகங்களின் தேவை இன்னும் குறைந்துவிடவில்லை. இணையத்தின் பயன்பாட்டை நுகராத கோடிக் கணக்கானோர் இன்றும் வாழ்கின்றனர். அப்படிப்பட்ட சூழலில் சிற்றிதழ்களின் தேவை இன்னும் அழிந்துவிடவில்லை.

பெரியார் காலத்திற்குப் பிறகு திராவிடர் இயக்க சிற்றிதழ்கள் படிப்படியாக அழிந்தேபோய்விட்டன. திராவிடர் அமைப்புகள் தங்களது தலைமைக்கழகங்கள் சார்பில் நடத்தும் 10 க்கும் குறைவான ஏடுகளைத் தவிர, அமைப்புகளின் நிலைப்பாடுகளையும் கட்டுப்பாடுகளையும் தாண்டி, சுதந்திரமான விவாதங்களை முன்னெடுக்கும் திராவிடர் கருத்தியல் கொண்ட சிற்றிதழ்கள் எதுவும் தற்போது இல்லை. பெரியார் காலத்திற்குப் பிறகு அப்படி ஒரு முயற்சியை ஏன் யாரும் எடுக்கவில்லை? முயற்சி எடுக்காததன் உள்நோக்கம் என்ன? அந்த உள்நோக்கத்தை உடைப்பது ஒன்றேதான் காட்டாற்றின் உள்நோக்கம்.

ஒருங்கிணைப்பாளர், தொகுப்புக்குழு

# புதுடில்லி ‘பார்வர்ட் பிரஸ்’ ஏடு தாக்கப்பட்டது! அசுரக்கூட்டத்துக்கு எதிராக ஆரியத் தாண்டவம்!!




ஃபார்வர்ட் பிரஸ் தாழ்த்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான ஒரு பத்திரிகை; அது எப்போதுமே பிராமண சக்திகளுக்குக் காணச் சகிக்காத ஒன்றாகவே இருந்திருக்கின்றது; கடந்த இரண்டு வருடங்களாக ஃபார்வர்ட் பிரஸ் மீது இந்த சக்திகள் அநேக தாக்குதல்களை நடத்தியுள்ளது; அந்தத் தாக்குதல்கள் நமது தார்மீக சக்தியைப் பலப்படுத்தின; இந்த சமீபத்திய நெருக்கடியிலிருந்தும் கூட நாங்கள் மீண்டு உயர்வோம்.

புதுடில்லி ஜவஹர்லால் பல்கலைக்கழக (JNU) பல்கலைக்கழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்றுவரும் மகிசாசுர வீரவணக்கநாள் இந்த 2014 ஆம் ஆண்டும் வழக்கமாக நடைபெற்றது. அக்டோபர் 9 அன்று ஜவஹர்லால் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஆர்.எஸ்.எஸ் ஸின் மாணவர் பிரிவான ABVP யைச் சேர்ந்த மாணவர்கள் விழாவில் புகுந்து கலவரத்தை நடத்தினர். விழாவை நடத்திய AIBSF மற்றும் ABVP மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. விழாவை நடத்திய மாணவர்கள் நமக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான தோழர்கள். Forward Press என்ற ஒரு மாத இதழையும் அவர்கள் நடத்தி வருகின்றனர்.

அந்த ஏட்டில் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் கட்டுரைகள் வெளியாகி வருகின்றன. விரைவில் தமிழுக்கும் சில பக்கங்களை ஒதுக்குவதாகவும், அதற்கு இணையாக தமிழ்நாட்டில் காட்டாறு இதழில் இந்தியில் சிலபக்கங்களை ஒதுக்கமுடியுமா? என்றும் கேட்டுள்ளனர். மொழிமாற்றத்திற்கான வசதிகள் குறைவாக இருப்பதால் அதுபற்றி யோசித்துச் சொல்கிறோம் என பதில் சொல்லி உள்ளோம்.

அண்மையில் அந்த ஏட்டின் பொறுப்பாசிரியர் பிரமோத் ரஞ்சன் அவர்களை புதுடில்லியில் சந்தித்தோம். குடி அரசு தொகுப்புநூல்களை இந்தியில் கொண்டுவர விருப்பம் தெரிவித்து அதன் கோப்புகளைக் கேட்டார். அவை இணையதளத்தில் இலவசமாகக் கிடைக்கின்றன எனக்கூறி எங்களிடமிருந்த அனைத்துக் கோப்புகளையும் கொடுத்தோம். தமிழிலிருந்து இந்திக்கு மொழிமாற்றம் செய்யும் அளவுக்கு இரண்டு மொழி அறிவும், பெரியாரியலும் அறிந்த வல்லுநர்கள் கிடைக்கவில்லை. எனவே குடி அரசு இந்தித் தொகுப்புப்பணி தொடங்க முடியாமலேயே நிற்கிறது எனக்கூறினர்.

முதற்கட்டமாக பெரியாரின் கட்டுரைகளை குறைந்தது 10 தலைப்புகளில் 200 பக்க அளவில் இந்தியில் தயாரித்துக் கொடுங்கள். நாங்களே அச்சிட்டு விநியோகிக்கிறோம் என உறுதி கொடுத்துள்ளனர். அதற்குரிய பணிகளைத் தொடங்கியுள்ளோம். முதல்முயற்சியாக கடவுளர் கதைகள், இந்துமதப்பண்டிகைகள் ஆகிய இரண்டு நூற்களையும் அவர்களுக்காக இந்தியில் மொழிபெயர்த்து வருகிறோம்.

அந்த இதழின் அக்டோபர் மாத ஏடு அரசுர்களின் சிறப்பிதழாகவே வெளியாகி

உள்ளது. இந்தச் சிறப்பிதழில் மகிசாசுரன் ஆரிய எதிர்ப்புத் தலைவன் என்றும், கிருஷ்ணன் ஆரியர்களின் கடவுள் அல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவன். வேதங்களுக்கு எதிரானவன் என்றும், ஆரியர்களும், இந்துமதமும் நமக்கு எதிரானவை என்றும் விளக்கமான கட்டுரைகள் வெளியாகி உள்ளன. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த சங் பரிவாரங்கள் மகிசாசுர நாளில் ஒரு கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தி Forward Press ஏட்டின் தோழர்கள் மீது பொய்வழக்குகளைப் பதிந்து அவர்கள்மீது அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளன. இது தொடர்பாக நமது நண்பர் தோழர் ப்ரமோத் ரஞ்சன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,


“தில்லி போலீஸ் அக்டோபர் 9-ஆம் நாளன்று புது தில்லி ஃபார்வர்ட் பிரஸ் அலுவலகத்தில் காலித்தனம் செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம். வியாழக்கிழமை (அக்டோபர் 9) காவல் துறையினர் எங்கள் பத்திரிகை ஊழியர்களைச் சட்டவிரோதமாகக் கைது செய்தனர். இப்போது நீதிமன்ற உத்தரவோ, உயர் அதிகாரிகளின் உத்தரவோ இன்றி, பத்திரிகைப் பிரதிகளை டில்லி கடைகளிலிருந்து பறிமுதல் செய்கின்றனர். அடிப்படைவாத சக்திகளின் செயலுக்கு உதாரணமாக உள்ள இந்த நடவடிக்கை இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்தைத் தடுப்பதாகவும், தர்க்கரீதியான அறிவுசார்ந்த கருத்துகளை நசுக்குவதாவும் உள்ளது” என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து பிரமோத் ரஞ்சன் கூறியதாவது:-

அக்டோபர் வெளியீடு 'பகுஜன்-ஷ்ரமண் பாரம்பரியம்' ('Bahujan-Shraman Tradition') பற்றிய சிறப்பிதழாகும்; (பகுஜன் பெரும்பான்மை மக்கள்; அதாவது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினரைக் குறிக்கும் ஒரு சொல்)

அதில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களைச் சார்ந்த பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் முன்னணி எழுத்தாளர்களின் கட்டுரைகளும் இடம் பெற்றிருந்தன; 'மஹிஷாசுரன் மற்றும் துர்காதேவி' கதை பகுஜன் பாணியில் எழுத்துகள் மற்றும் ஓவியங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், ஆட்சேபனைக்குரிய செய்தி என்று குறிப்பிடும்




அளவிற்கு அந்த இதழில் எதுவும் இல்லை; எந்த ஒரு சமூகத்தின் உணர்வுகளையும் அவமானப்படுத்தும் அல்லது புண்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை.

பகுஜன் பண்பாடு மற்றும் நாகரீகச் சின்னங்களை அடையாளம் காணவும், அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கவுமே முயற்சிக்கிறோம்; பகுஜன் நூல்களுக்கு ஜோதிபா புலே தொடங்கி அம்பேத்கர், தந்தை பெரியார் வரை ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு.


கருத்துச் சுதந்திரம் மீதான இந்தத் தாக்குதலைக் கண்டிக்கும் அதே வேளையில், பா.ஜ.க.விலுள்ள பிராமண சக்திகளின் கட்டளைப்படி தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் கூற விரும்புகிறோம்.

ஃபார்வர்ட் பிரஸ் தாழ்த்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான ஒரு பத்திரிகை; அது எப்போதுமே பிராமண சக்திகளுக்குக்கு காணச் சகிக்காத ஒன்றாகவே இருந்திருக்கின்றது; கடந்த இரண்டு வருடங்களாக ஃபார்வர்ட் பிரஸ் மீது இந்த சக்திகள் அநேக தாக்குதல்களை நடத்தியுள்ளது; அந்தத் தாக்குதல்கள் நமது தார்மீக சக்தியைப் பலப்படுத்தின; இந்த சமீபத்திய நெருக்கடியிலிருந்தும் கூட நாங்கள் மீண்டு உயர்வோம் என்று நம்புகிறோம் என்றும் கூறியுள்ளார்.

ஏபி.வி.பி, ஆர்.எஸ்.எஸ் மற்றும் புதுடில்லி காவல்துறையினரின் அத்துமீறல்களைக் கண்டிப்போம். ஆரியப் பார்ப்பனர்களின் ஆதிக்கவெறித் தாக்குதல்களுக்கு எதிராக வடமாநிலங்களில் களம்காணும் புதுடில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழக ஏ.ஐ.பி.எஸ்.எஃப் மற்றும் ஃபார்வர்டு ப்ரஸ் தோழர்களுக்குத் தோள்கொடுப்போம்.

# குழந்தை மையக் கல்வி

## முனைவர் பூ.மணிமாறன்.



> மனிதருக்கும் - இயற்கைக்கும் , மனிதருக்கும் - மனிதருக்குமிடையே நிகழ்ந்து வரும் இடை வினைகளின் தொடர்ச்சியானது கல்வியின் தொடர்ச்சியாகவும் , வளர்ச்சியாகவும் இருந்து வருகின்றது.



இந்தியாவில் அரசியல் சாசனம் உருவாகி 64 ஆண்டுகளுக்குப்பின் கல்வி உரிமைச் சட்டம் 2009 நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட நிலையில் தமிழக அரசு சமச்சீர் கல்வியை முன்னெடுக்கும் காலகட்டத்தில் கல்வி பற்றிய இக்கட்டுரை சில சிந்தனைத் தெறிப்புகளை உண்டாக்கும் என நம்புகிறோம். சில உள்ளார்ந்த விமர்சனங்களை ஏற்படுத்தும் என எண்ணுகிறோம்.

மனிதருக்கும் இயற்கைக்கும் , மனிதருக்கும் மனிதருக்குமிடையே நிகழ்ந்து வரும் இடை வினைகளின் தொடர்ச்சியானது கல்வியின் தொடர்ச்சியாகவும் , வளர்ச்சியாகவும் இருந்து வருகின்றது. கல்வி என்பது வலுவான ஒன்றாகும். அது உடல்வலு, உளவலு என்பவற்றுடன் இணைந்து உலகின் ஆற்றலை கட்டமைப்பு செய்து கொண்டுள்ளது. சிக்கலான இந்த சமூக அமைப்பில் மனித உறவுகள் பன்முகத் தன்மை கொண்டவையாக காணப்படுகிறது. அந்த சிக்கல் என்பது சாதியால் மதத்தால் நிறத்தால் பொருளாதாரத்தால் ஏற்றத்தாழ்வு கொண்ட பன்முகத் தன்மை கொண்ட சமூகமாக மனித சமூகம் காணப்படுகிறது. எனவே பன்முகத் தன்மை கொண்ட இந்தச் சமூக அமைப்பை நெறிப்படுத்த கல்வி பணியாற்றுகிறது. மனிதருக்கும் இயற்கைக்குமான தொடர்புகளை நெறிப்படுத்துதல், மனிதருக்கும் இயற்கைக்குமான உறவுகளை நெறிப்படுத்துதல், மனிதருகிடையே சிந்திக்கும் மனப்பான்மையை பகுத்தறியும் தன்மையை கல்வி ஏற்படுத்துகிறது. அதே போன்று மனித சமுதாயத்தின் ஆரம்பதில்

இந்தியாவில் அரசியல் சாசனம் உருவாகி 64 ஆண்டுகளுக்குப்பின் கல்வி உரிமைச் சட்டம் 2009 நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட நிலையில் தமிழக அரசு சமச்சீர் கல்வியை முன்னெடுக்கும் காலகட்டத்தில் கல்வி பற்றிய இக்கட்டுரை சில சிந்தனைத் தெறிப்புகளை உண்டாக்கும் என நம்புகிறோம். சில உள்ளார்ந்த விமர்சனங்களை ஏற்படுத்தும் என எண்ணுகிறோம்.

மனிதருக்கும் இயற்கைக்கும் , மனிதருக்கும் மனிதருக்குமிடையே நிகழ்ந்து வரும் இடை வினைகளின் தொடர்ச்சியானது கல்வியின் தொடர்ச்சியாகவும் , வளர்ச்சியாகவும் இருந்து வருகின்றது. கல்வி என்பது வலுவான ஒன்றாகும். அது உடல்வலு, உளவலு என்பவற்றுடன் இணைந்து உலகின் ஆற்றலை கட்டமைப்பு செய்து கொண்டுள்ளது. சிக்கலான இந்த சமூக அமைப்பில் மனித உறவுகள் பன்முகத் தன்மை கொண்டவையாக காணப்படுகிறது. அந்த சிக்கல் என்பது சாதியால் மதத்தால் நிறத்தால் பொருளாதாரத்தால் ஏற்றத்தாழ்வு கொண்ட பன்முகத் தன்மை கொண்ட சமூகமாக மனித சமூகம் காணப்படுகிறது. எனவே பன்முகத் தன்மை கொண்ட இந்தச் சமூக அமைப்பை நெறிப்படுத்த கல்வி பணியாற்றுகிறது. மனிதருக்கும் இயற்கைக்குமான தொடர்புகளை நெறிப்படுத்துதல், மனிதருக்கும் இயற்கைக்கு மான உறவுகளை நெறிப்படுத்துதல், மனிதருகிடையே சிந்திக்கும் மனப்பான்மையை பகுத்தறியும் தன்மையை கல்வி ஏற்படுத்துகிறது. அதே போன்று மனித சமுதாயத்தின் ஆரம்பதில் இருந்தே கல்வியும் வளர்ந்து வந்துள்ளது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு உயிரும் தனது பல்வேறு வளர்ச்சி காலகட்டங் களில் தனக்குப் பொருத்தமானதை, தேவையானதைக் கற்றுக் கொள்கிறது. மனிதனின் தேவைகள் மட்டுமல்ல காலம் சூழல் போன்ற கூறுகளும் கல்வியின் தேவையை நிர்ணையிகின்றன.


இத்தகைய தேவையின் அடிப்படையில் வரக்கூடிய கல்விப் போக்குகளைப் பற்றிய அடிப்படைகளையும் விளக்கங்களையும் சிந்தனையாளர்கள் வழங்கி வருகிறார்கள். அத்தகைய அவர்களுடைய சிந்தனைகள் அவரவர் வாழ்நாட்களின் கால,தேச,சமூக சூழலுக்கு ஏற்ப அமைகின்றன. இந்த அடிப்படையில் கல்வி பற்றிய சிந்தனைகள் பாரம்பரிய நோக்கில் பழமையானதாகவும் பிற்காலத்தில் புதிய சிந்தனைக் களமாகவும் கல்வி



அமைகின்றது.

பிளாட்டோ , அரிஸ்டாட்டில் ஆகியோர் காலத்திலிருந்து ரூசோ ,கொமேனியஸ், ப்ரோபோல், பெஸ்டலோசி போன்றோர் கூட்டாக கல்விச் சிந்தனைகளை வழங்கினர். காந்தி,தாகூர் மற்றும் டுயி போன்றோர் பல்வேறு கோணங்களில் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளை விளக்கிய மேதைகளை நாம் கண்டுள்ளோம். இந்தச் சிந்தனையாளர்களின் சிந்தனைகள் அவர்கள் வாழ்ந்த காலம், அன்றைய சமூகம் எதிர்நோக்கிய பிரச்சனைகள், மக்களின் அறிவுத் தேவைகள் ஆகியவற்றின் அடிப் படையில் கல்விக் கோட்பாடுகளை உருவாக்கினர். நெரிபடுத்தினர். ஆரம்ப காலங்களில் ஆன்மிக நெறிகளைக் கொண்டு வளர்ந்த கல்வி வரலாறு, பிற்காலத்தில் மாற்றுச் சிந்தனை ஓட்டத்தை ஒட்டியே வளர்ந்தது. தொடக்க கால கல்வி வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினரை மட்டுமே மையப்படுத்தி இருந்தது. அதிலும் குறிப்பாக பார்ப்பன வேளாள சாதியினரை மையப்படுத்தி இருந்தது. அறிவுத்தளங்களில் இந்த சாதியினர் மட்டுமே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அக்கால கட்டத்தில் அயோத்திதாசப் பண்டிதர் போன்ற ஒரு சில தலித் அறிவுஜீவிகள் மட்டுமே தமது பங்களிப்பை ஆற்றியதை வரலாறு நமக்குக் கூறுகிறது.

காலப்போக்கில் மேற்கொண்ட கல்வி போக்குகள் அரசியல் பொருளாதார, சமூகத்தின் அழுத்தங்களை ஒட்டி வளர்ந்த கல்வியின் போக்கு, பிற்காலத்தில் புதிய சிந்தனைகளை மாற்றுக் கல்வியினை ஒட்டி புரட்சிகரமான




"இந்திய இராணுவத்திற்கு எதிரான காட்சிகளுடைய ஹைதர் படத்தைத் தடை செய்யவேண்டும்" என்று சுப்பிரமணிய சாமி ட்விட்டரில் எழுதிய பிறகுதான் நமக்கு இந்தப் படம் பார்க்கவேண்டும் என்கிற தூண்டுதலே ஏற்பட்டது.

# இந்திய வல்லாதிக்கத்தைத் தோலுரிக்கும் ஹைதர்

– பிரபா அழகர்

இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படுகிற ஆகஸ்ட் 15, 1947 அன்று, இந்தியா தலையில்லாத முண்டமாகதான் இருந்தது என்ற வரலாறு நமக்குச் சொல்லித்தரப்படவில்லை.

*மக்களிடம் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதில் திரைப்படங்கள் முக்கியப் பங்கு வகின்றன. உதாரணத்திற்குக் காஷ்மீர் பிரச்சனை பற்றிய நம் மக்கள் பெரும்பாலானோரின் கருத்து திரைப்படங்களின் மூலம் கட்டமைக்கப் பட்டவைதான். கதாநாயகன் இராணுவ அதிகாரியாக இருப்பார், அவர் பனிபடர்ந்த மலைகளில் தாடி வைத்த குல்லா அணிந்த தீவிரவாதிகளைப் பந்தாடுவார். ஈவு இறக்கமற்ற அந்தத் தீவிரவாதிகள் மக்களைப் பணய கைதிகளாகப் பிடித்துக்கொண்டு துன்புறுத்துவார்கள், கதாநாயகனும் மற்ற இந்திய இராணுவத்தினரும் உயிரை பணயம் வைத்து மக்களை மீட்பார்கள். இதுபோன்ற பல திரைப்படங்கள் இந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. காஷ்மீர் பிரச்சனை பற்றிய நேர்மையற்ற அயோக்கியத்தனமான பதிவுகளின் முன்னோடி என்று 1992இல் வெளிவந்த மணிரத்னத்தின் 'ரோஜா' திரைப்படத்தைக் கண்டிப்பாக நாம் சொல்லலாம்.*

*இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படுகிற ஆகஸ்ட் 15, 1947 அன்று, இந்தியா தலையில்லாத முண்டமாகதான் இருந்தது என்ற*

> பாகிஸ்தான் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள முடியாத ஹரிசிங், மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அன்றைய இந்தியாவின் கவர்னர் ஜெனராலாக இருந்த மவுன்ட்பேட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

மக்களிடம் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதில் திரைப்படங்கள் முக்கியப் பங்கு வகின்றன. உதாரணத்திற்குக் காஷ்மீர் பிரச்சனை பற்றிய நம் மக்கள் பெரும்பாலானோரின் கருத்து திரைப்படங்களின் மூலம் கட்டமைக்கப் பட்டவைதான். கதாநாயகன் இராணுவ அதிகாரியாக இருப்பார், அவர் பனிபடர்ந்த மலைகளில் தாடி வைத்த குல்லா அணிந்த தீவிரவாதிகளைப் பந்தாடுவார். ஈவு இறக்கமற்ற அந்தத் தீவிரவாதிகள் மக்களைப் பணய கைதிகளாகப் பிடித்துக்கொண்டு துன்புறுத்துவார்கள், கதாநாயகனும் மற்ற இந்திய இராணுவத்தினரும் உயிரை பணயம் வைத்து மக்களை மீட்பார்கள். இதுபோன்ற பல திரைப்படங்கள் இந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. காஷ்மீர் பிரச்சனை பற்றிய நேர்மையற்ற அயோக்கியத்தனமான பதிவுகளின் முன்னோடி என்று 1992இல் வெளிவந்த மணிரத்னத்தின் 'ரோஜா' திரைப்படத்தைக் கண்டிப்பாக நாம் சொல்லலாம்.

இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படுகிற ஆகஸ்ட் 15, 1947 அன்று, இந்தியா தலையில்லாத முண்டமாகதான் இருந்தது என்ற வரலாறு நமக்குச் சொல்லித்தரப்படவில்லை. அன்றைய தேதியில் காஷ்மீர் தனிநாடு. முஸ்லிம் மதத்தைப் பின்பற்றக்கூடியவர்கள் பெரும் பான்மையாகக் கொண்ட அந்த நாட்டை அன்று ஆட்சி செய்தது ஹரிசிங் என்கிற ஹிந்து மன்னர். பாகிஸ்தான் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள முடியாத ஹரிசிங், மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அன்றைய இந்தியாவின் கவர்னர் ஜெனராலாக இருந்த மவுன்ட்பேட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அதுவும் இந்தியவுடன் இணைந்திருப்பதா இல்லையா என்பது குறித்துக் காஷ்மீர் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற வாக்குறுதியுடன் தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இன்று வரை அந்தப் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேயில்லை. இந்தியா இன்று ஆறுலட்சம் இராணுவத்தினரை காஷ்மீரில் நிறுத்தி அந்த மண்ணை வஞ்சகமாக ஆக்கிரமித்திருக்கிறது. இந்த உண்மைகளை அறிந்தவர்கள், காஷ்மீரை காட்டி இந்திய தேசப் பற்றை வளர்க்கிற 'ரோஜா' போன்ற படங்களைப் பார்த்துக் கோபம் கொள்ளவே செய்வார்கள்.

நமக்கு கொஞ்சம் ஆறுதலாக இப்போது 'ஹைதர்' என்கிற இந்தி திரைப்படம் வெளிவந்திருக்கிறது. இந்தி திரைப்படத் துறையில் பிரபலமான இசை அமைப்பாளரும், இயக்குனருமான விஷால் பரத்வாஜ் இந்தத் திரைப்படத்தினை இயக்கியிருக்கிறார். ஷேக்ஸ்பியர் எழுதிய புகழ்பெற்ற ஹேம்லெட் (Hamlet) என்கிற நாடகத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படத்தின் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தின் சிறப்பாக நாம் பார்ப்பது கதையை அல்ல, கதையின் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரச்சனை நிறைந்த காஷ்மீர் வாழ்க்கை சூழலை. விஷால் பரத்வாஜுடன் காஷ்மீரை சேர்ந்த பத்திரிக்கையாளரான பஷரத் பீர் (Basharat Peer) என்பவர் இணைந்து இந்தப் படத்தின் திரைக்கதை உரையாடலை எழுதியிருக்கிறார். காஷ்மீர் மக்களின் தற்போதைய வாழ்க்கையை மய்யமாக வைத்து பஷரத் பீர் எழுதிய Curfewed Nights நூலினை வாசித்துவிட்டுதான் இயக்குனர் இந்தக் கதை களத்தைத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். (ஊரடங்கு இரவுகள் என்று அது காலச்சுவடு வெளியீடாகத் தமிழில் வந்திருக்கிறது)

இராணுவ சிறப்பு அதிகார சட்டம் (Armed Forces Special Powers Act - AFPSA) என்கிற கொடூரமான சட்டம் 1990இல் காஷ்மீரில் நடைமுறைக்கு வந்து இன்று வரை உள்ளது. சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம், தேவையேற்பட்டால் சுட்டுக் கொல்லவும் செய்யலாம் என்கிற அளவிற்கு

மக்களிடம் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதில் திரைப்படங்கள் முக்கியப் பங்கு வகின்றன. உதாரணத்திற்குக் காஷ்மீர் பிரச்சனை பற்றிய நம் மக்கள் பெரும்பாலானோரின் கருத்து திரைப்படங்களின் மூலம் கட்டமைக்கப் பட்டவைதான். கதாநாயகன் இராணுவ அதிகாரியாக இருப்பார், அவர் பனிபடர்ந்த மலைகளில் தாடி வைத்த குல்லா அணிந்த தீவிரவாதிகளைப் பந்தாடுவார். ஈவு இறக்கமற்ற அந்தத் தீவிரவாதிகள் மக்களைப் பணய கைதிகளாகப் பிடித்துக்கொண்டு துன்புறுத்துவார்கள், கதாநாயகனும் மற்ற இந்திய இராணுவத்தினரும் உயிரை பணயம் வைத்து மக்களை மீட்பார்கள். இதுபோன்ற பல திரைப்படங்கள் இந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. காஷ்மீர் பிரச்சனை பற்றிய நேர்மையற்ற அயோக்கியத்தனமான பதிவுகளின் முன்னோடி என்று 1992இல் வெளிவந்த மணிரத்னத்தின் 'ரோஜா' திரைப்படத்தைக் கண்டிப்பாக நாம் சொல்லலாம்.

இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படுகிற ஆகஸ்ட் 15, 1947 அன்று, இந்தியா தலையில்லாத முண்டமாகதான் இருந்தது என்ற வரலாறு நமக்குச் சொல்லித்தரப்படவில்லை. அன்றைய தேதியில் காஷ்மீர் தனிநாடு. முஸ்லிம் மதத்தைப் பின்பற்றக்கூடியவர்கள் பெரும் பான்மையாகக் கொண்ட அந்த நாட்டை அன்று ஆட்சி செய்தது ஹரிசிங் என்கிற ஹிந்து மன்னர். பாகிஸ்தான் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள முடியாத ஹரிசிங், மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அன்றைய இந்தியாவின் கவர்னர் ஜெனராலாக இருந்த மவுன்ட்பேட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அதுவும் இந்தியவுடன் இணைந்திருப்பதா இல்லையா என்பது குறித்துக் காஷ்மீர் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற வாக்குறுதியுடன் தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இன்று வரை அந்தப் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேயில்லை. இந்தியா இன்று ஆறுலட்சம் இராணுவத்தினரை காஷ்மீரில் நிறுத்தி அந்த மண்ணை வஞ்சகமாக ஆக்கிரமித்திருக்கிறது. இந்த உண்மைகளை அறிந்தவர்கள், காஷ்மீரை காட்டி இந்திய தேசப் பற்றை வளர்க்கிற 'ரோஜா' போன்ற படங்களைப் பார்த்துக் கோபம் கொள்ளவே செய்வார்கள்.

> **“ படம் சொல்லும் செய்தி ஒரு தனி நபருடைய பிரச்சனையைப் பற்றியதல்ல. இந்திய வல்லாதிக்க அரசு, எப்படி காஷ்மீர் மக்களுக்குள்ளேயே கங்காணிகளையும், காட்டிக் கொடுப்பவர்களையும், துரோகிகளையும் உருவாக்கிவைத்திருக்கிறது என்பதைப் படம் தெளிவாகச் சொல்கிறது**



நமக்கு கொஞ்சம் ஆறுதலாக இப்போது 'ஹைதர்' என்கிற இந்தி திரைப்படம் வெளிவந்திருக்கிறது. இந்தி திரைப்படத் துறையில் பிரபலமான இசை அமைப்பாளரும், இயக்குனருமான விஷால் பரத்வாஜ் இந்தத் திரைப்படத்தினை இயக்கியிருக்கிறார். ஷேக்ஸ்பியர் எழுதிய புகழ்பெற்ற ஹேம்லெட் (Hamlet) என்கிற நாடகத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படத்தின் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தின் சிறப்பாக நாம் பார்ப்பது கதையை அல்ல, கதையின் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரச்சனை நிறைந்த காஷ்மீர் வாழ்க்கை சூழலை. விஷால் பரத்வாஜுடன் காஷ்மீரை சேர்ந்த பத்திரிக்கையாளரான பஷரத் பீர் (Basharat Peer) என்பவர் இணைந்து இந்தப் படத்தின் திரைக்கதை உரையாடலை எழுதியிருக்கிறார். காஷ்மீர் மக்களின் தற்போதைய வாழ்க்கையை மய்யமாக வைத்து பஷரத் பீர் எழுதிய Curfewed Nights நூலினை வாசித்துவிட்டுதான் இயக்குனர்

Dr. பெரியார் செல்வி

# உணவே மருந்து



கலோரி என்பது உணவின் சக்தியாகும். மனிதனின் உணவானது உடலுக்கு சக்தியை கொடுக்கிறது. இது பணிகளைச் செய்ய உதவுகிறது மாறாக அளவுக்கு அதிகமாக எடுக்கும் உணவானது கொழுப்பாக மாறுகிறது அது உடற்பருமனை உண்டாக்குவதோடு நோய்களை உண்டக்கும்.

## சராசரி மனிதனின் ஒரு நாளைக்குத் தேவையான கலோரி அளவுகள்

| பெண்கள் | கலோரி/நாள் |
|---|---|
| உடல் உழைப்பு அதிகம் உள்ளவர்கள் | - 2850 |
| மிதமான உழைப்பு உள்ளவர்கள் | - 2230 |
| உழைப்பு குறைவாக உள்ளவர்கள் | - 1900 |
| கர்ப்பிணி பெண்கள் | - +350 |
| பாலுட்டும் தாய்மார்கள்(0-6மாதம்) | - +600 |
| பாலுட்டும் தாய்மார்கள்(6-12மாதம்) | - +520 |
| 16-18வருடம் | - 2642 |
| **சிறுமியர்** | |
| 10-12வருடம் | - 1965 |
| 13-15வருடம் | - 2056 |
| 16-18வருடம் | - 2064 |
| குழந்தைகள் | |
| 0-6மாதம் | - 92 |
| 6-12மாதம் | - 80 |
| 1-3வருடம் | - 1060 |
| 4-6வருடம் | - 1350 |
| 7-9வருடம் | - 1690 |



| ஆண்கள் | கலோரி / நாள் |
|---|---|
| உடல் உழைப்பு அதிகம் உள்ளவர்கள் | - 3490 |
| மிதமான உழைப்பு உள்ளவர்கள் | - 2730 |
| உழைப்பு குறைவாக உள்ளவர்கள் | - 2320 |
| சிறுவர்கள் | |
| 10-12வருடம் | - 2194 |
| 13-15வருடம் | - 2447 |
| 16-18வருடம் | - 2642 |





| காலை உணவு | அளவு | கலோரி |
|---|---|---|
| இட்லி | 3 | 229 |
| உப்புமா | 1கப் | 270 |
| பூரி | 1 | 80 |
| தோசை | 1 | 125 |
| கிச்சடி | 1கப் | 200 |
| கோதுமை கஞ்சி | 1கப் | 220 |



| மதிய உணவு | அளவு | கலோரி |
|---|---|---|
| சாதம் | 1கப் | 175 |
| தயிர் சாதம் | 1கப் | 250 |
| பருப்பு | 1/2கப் | 100 |
| சாம்பார் | 1கப் | 110 |
| பொரியல் | 1கப் | 150 |
| மோர் | 1கப் | 30 |
| தயிர் | 1கப் | 60 |



| இரவு உணவு | அளவு | கலோரி |
|---|---|---|
| சப்பாத்தி | 1 | 70 |
| ப்ரோட்டா | 1 | 160 |
| தேங்காய் சட்னி | 1 ஸ்பூன் | 80 |
| தக்காளி சட்னி | 1 ஸ்பூன் | 20 |
| காய்கறி குருமா | 100 கிராம் | 120 |

மற்ற உணவுகள் வகைகள் மற்றும் அசைவ உணவு வகைகள் பற்றி அடுத்து பார்ப்போம்

## குடி முழுகிப் போச்சாம்....

**– குண்டூசி**



நினைவு தெரிந்த நாளிலிருந்து
வாரத்தில் 4 நாள் மட்டுமே
அப்பா வீட்டில் இருப்பார்....
மிட்டாய்க்காய் அழுதபடி
அப்பாவை கேட்டால்
மவுனமே பதிலாய் அம்மா...
புள்ள தாவணி போட்டுட்டா
இனியுமா முனங்கியபடி அம்மா ....
இப்பெல்லாம் எங்களுடனே
எப்போதும் அப்பா.....
இன்று என் காதலன்
வேறு சாதி
அம்மா குடி முழுகிப் போச்சாம்..

முருகன்
கழுத்தில் சிலுவை
மனு.

---

தென்னாடுடைய சிவனே
எந்நாட்டவர்க்கும் இறைவா .
உள்ளூர்
பள்ளன், பறையன், சக்கிலியன்
உள்ளே வராதே.

---

சமபந்தி விருந்தாமே
கோமாதா குழம்பு வை ..

---

உன், என்
வீடுகள் சமத்துவபுரத்தில்
ஊரை விட்டு ஓடிய நாம் .





# காதலுக்கு... காவலாண்டியூர்

**நேர்காணல்: மதுரை யாழ்மொழி, காவை விஜயகுமார்**

> **தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஒரே குவளையில் தேநீர் கொடுங்கள் என்று கூறிய போது, தேநீர்க்கடை உரிமையாளர் மிகக் கடுமையாக, ‘‘சக்கிலிப் பசங்களுக்கெல்லாம் அப்படி டீ தர முடியாது’’ எனக் கூறினார். உடனே நாங்கள், ‘‘அவர்களும் சக மனிதர்கள் தானே’’ எனக் கூறி புரிய வைக்க முயன்றோம். ஆனால் கடை உரிமையாளர் ஒப்புக் கொள்ளாததால், இரட்டைக்குவளைகளை உடைத்து, கடையை இழுத்து மூடினோம்.**

*திராவிடர் கழகம் தன் பகுதியில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனது தமிழாசிரியர் தங்கவேலு அவர்கள் மூலம் பகுத்தறிவுக்கருத்துகளும், பெரியார் இயக்கத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கப்பெற்றவர் காவலாண்டியூர் ஈசுவரன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பெரியாரியலை முழுமையாக ஏற்று அதற்காக முழு நேரமாக இயங்கத் தொடங்கிய ஈசுவரன், தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காகத் தன் பகுதியில் முன்னெடுத்த போராட்டங்கள் ஏராளம். இரட்டைக்குவளை முறைக்கு எதிராகவும், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திய இவர், அதோடு நிற்காமல் பண்பாட்டுத் தளத்திலும் பல போராட்டங்களை நடத்தி, வெற்றியும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடையூறுகளுக்கிடையே, சில சமயம் அடி உதைகளை வாங்கிக் கொண்டும் எண்ணற்ற ஜாதி மறுப்புத்திருமணங்களை நடத்தி வைத்தவர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சித்துசாமி, அபிமன்யு, பழனிச்சாமி, செட்டியூர் ஈசுவரன், இராஜேந்திரன், விஜயகுமார், சசிக்குமார், இளவரசன், எழிலன் போன்ற பலருடன் இணைந்து இதுவரை 100-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்திவைத்துள்ளார்.*

**இரட்டைக் குவளை முறைக்கெதிராக நீங்கள் நடத்திய போராட்டம்பற்றி...**

இரட்டைக் குவளை முறை காவலாண்டியூரில் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்தது.1985 86 ஆண்டுகள்.

திராவிடர் கழகம் தன் பகுதியில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனது தமிழாசிரியர் தங்கவேலு அவர்கள் மூலம் பகுத்தறிவுக்கருத்துகளும், பெரியார் இயக்கத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கப்பெற்றவர் காவலாண்டியூர் ஈசுவரன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பெரியாரியலை முழுமையாக ஏற்று அதற்காக முழு நேரமாக இயங்கத் தொடங்கிய ஈசுவரன், தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காகத் தன் பகுதியில் முன்னெடுத்த போராட்டங்கள் ஏராளம். இரட்டைக்குவளை முறைக்கு எதிராகவும், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திய இவர், அதோடு நிற்காமல் பண்பாட்டுத் தளத்திலும் பல போராட்டங்களை நடத்தி, வெற்றியும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடையூறுகளுக்கிடையே, சில சமயம் அடி உதைகளை வாங்கிக் கொண்டும் எண்ணற்ற ஜாதி மறுப்புத்திருமணங்களை நடத்தி வைத்தவர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சித்துசாமி, அபிமன்யு, பழனிச்சாமி, செட்டியூர் ஈசுவரன், இராஜேந்திரன், விஜயகுமார், சசிக்குமார், இளவரசன், எழிலன் போன்ற பலருடன் இணைந்து இதுவரை 100-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்திவைத்துள்ளார்.

**இரட்டைக் குவளை முறைக்கெதிராக நீங்கள் நடத்திய போராட்டம்பற்றி...**

இரட்டைக் குவளை முறை காவலாண்டியூரில் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. 1985 86 ஆண்டுகள். எங்கள் பகுதியில் திராவிடர் கழகம் வலிமையாக இருந்த காலம் அது! அப்போது மாநில அமைப்புச் செயலாளராக இருந்த கொளத்தூர் மணி அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, தோழர் சித்துசாமி, தோழர் சம்பத், தோழர் பொன்னுச்சாமி, தோழர் அபிமன்யூ, தோழர் பெருமாள் ஆகியோருடன் நானும், நண்பர்கள் சிலரும் தேநீர் கடைக்குச் சென்றோம். தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஒரே குவளையில் தேநீர் கொடுங்கள் என்று கூறிய போது, தேநீர்க்கடை உரிமையாளர் மிகக் கடுமையாக, “சக்கிலிப் பசங்களுக்கெல்லாம் அப்படி டீ தர முடியாது” எனக் கூறினார். உடனே நாங்கள், “அவர்களும் சக மனிதர்கள் தானே” எனக் கூறி புரிய வைக்க முயன்றோம். ஆனால்

> **ஊர்-சேரி என்ற இரட்டை வாழ்விடம் எங்கள் பகுதியிலும் இருந்து வந்தது. அதற்கெதிராக நாங்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிக்கு “நெடுஞ்செழியன் நகர்” என்று பெயரிட்டோம்.**

கடை உரிமையாளர் ஒப்புக் கொள்ளாததால், இரட்டைக்குவளைகளை உடைத்து, கடையை இழுத்து மூடினோம். இரட்டைக்குவளை முறை பின்பற்றப்பட்ட அனைத்துக் கடைகளிலும் இதே போன்ற போராட்டங்களை முன்னெடுத்தோம். பின், அன்றே சேலத்திற்கு சென்று, தீண்டாமை ஒழிப்புப் பிரிவில் வழக்கு பதிவு செய்தோம். அந்தப்போராட்டம் எங்கள் ஊரைச் சுற்றியுள்ள 16 கிராமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பின் எங்கள் பகுதியில் இரட்டைக் குவளை முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

**ஊர்-சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கெதிராக நீங்கள் முன்னெடுத்த போராட்டம் பற்றி**

தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதி சேரி என்றும் மற்ற உயர் ஜாதியினர் வாழும் பகுதி ஊர் என்றும் அழைக்கப்படுகின்ற ஊர் சேரி என்ற இரட்டை வாழ்விடம் எங்கள் பகுதியிலும் இருந்து வந்தது. அதற்கெதிராக நாங்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிக்கு “நெடுஞ்செழியன் நகர்” என்று பெயரிட்டோம். ஊரையும் சேரியையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, திராவிடர் விடுதலைக் கழகம் சேலத்தில் நடத்திய ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில், ஊர் பகுதியில் எனக்கு சொந்தமான 2 சென்ட் நிலத்தை ஆதிதிராவிடத் தோழருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தேன்.

**தீண்டாமைக்கெதிராக நீங்கள் முன்னெடுத்த மற்ற போராட்டங்கள் பற்றி**

எங்கள் ஊரில் உயர் ஜாதியினருக்கான மாரியம்மன் கோவிலொன்று இருந்தது. அந்தக் கோயிலிருக்கும் தெருவிற்குள்ளும், அந்த கோவிலுக்குள்ளும் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக் கூடாது என்ற தீண்டாமை முறை நிலவி வந்தது. மேலும் அக்கோவிலில் வெட்டும் ஆடுகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் உண்ணக்



திராவிடர் கழகம் தன் பகுதியில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனது தமிழாசிரியர் தங்கவேலு அவர்கள் மூலம் பகுத்தறிவுக்கருத்துகளும், பெரியார் இயக்கத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கப்பெற்றவர் காவலாண்டியூர் ஈசுவரன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பெரியாரியலை முழுமையாக ஏற்று அதற்காக முழு நேரமாக இயங்கத் தொடங்கிய ஈசுவரன், தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காகத் தன் பகுதியில் முன்னெடுத்த போராட்டங்கள் ஏராளம். இரட்டைக்குவளை முறைக்கு எதிராகவும், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திய இவர், அதோடு நிற்காமல் பண்பாட்டுத் தளத்திலும் பல போராட்டங்களை நடத்தி, வெற்றியும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடையூறுகளுக்கிடையே, சில சமயம் அடி உதைகளை வாங்கிக் கொண்டும் எண்ணற்ற ஜாதி மறுப்புத்திருமணங்களை நடத்தி வைத்தவர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சித்துசாமி, அபிமன்யு, பழனிச்சாமி, செட்டியூர் ஈசுவரன், இராஜேந்திரன், விஜயகுமார், சசிக்குமார், இளவரசன், எழிலன் போன்ற பலருடன் இணைந்து இதுவரை 100-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்திவைத்துள்ளார்.

**இரட்டைக் குவளை முறைக்கெதிராக நீங்கள் நடத்திய போராட்டம்பற்றி...**

இரட்டைக் குவளை முறை காவலாண்டியூரில் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. 1985 86 ஆண்டுகள். எங்கள் பகுதியில் திராவிடர் கழகம் வலிமையாக இருந்த காலம் அது! அப்போது மாநில அமைப்புச் செயலாளராக இருந்த கொளத்தூர் மணி அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, தோழர் சித்துசாமி, தோழர் சம்பத், தோழர் பொன்னுச்சாமி, தோழர் அபிமன்யூ, தோழர் பெருமாள் ஆகியோருடன் நானும், நண்பர்கள் சிலரும் தேநீர் கடைக்குச் சென்றோம். தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஒரே குவளையில் தேநீர் கொடுங்கள் என்று கூறிய போது, தேநீர்க்கடை உரிமையாளர் மிகக் கடுமையாக, “சக்கிலிப் பசங்களுக்கெல்லாம் அப்படி டீ தர முடியாது” எனக் கூறினார். உடனே நாங்கள், “அவர்களும் சக மனிதர்கள் தானே” எனக் கூறி புரிய வைக்க முயன்றோம். ஆனால் கடை உரிமையாளர் ஒப்புக் கொள்ளாததால், இரட்டைக்குவளைகளை உடைத்து, கடையை

திராவிடர் கழகம் தன் பகுதியில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனது தமிழாசிரியர் தங்கவேலு அவர்கள் மூலம் பகுத்தறிவுக்கருத்துகளும், பெரியார் இயக்கத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கப்பெற்றவர் காவலாண்டியூர் ஈசுவரன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பெரியாரியலை முழுமையாக ஏற்று அதற்காக முழு நேரமாக இயங்கத் தொடங்கிய ஈசுவரன், தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காகத் தன் பகுதியில் முன்னெடுத்த போராட்டங்கள் ஏராளம். இரட்டைக்குவளை முறைக்கு எதிராகவும், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திய இவர், அதோடு நிற்காமல் பண்பாட்டுத் தளத்திலும் பல போராட்டங்களை நடத்தி, வெற்றியும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடையூறுகளுக்கிடையே, சில சமயம் அடி உதைகளை வாங்கிக் கொண்டும் எண்ணற்ற ஜாதி மறுப்புத்திருமணங்களை நடத்தி வைத்தவர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சித்துசாமி, அபிமன்யு, பழனிச்சாமி, செட்டியூர் ஈசுவரன், இராஜேந்திரன், விஜயகுமார், சசிக்குமார், இளவரசன், எழிலன் போன்ற பலருடன் இணைந்து இதுவரை 100-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்திவைத்துள்ளார்.

**இரட்டைக் குவளை முறைக்கெதிராக நீங்கள் நடத்திய போராட்டம்பற்றி...**

இரட்டைக் குவளை முறை காவலாண்டியூரில் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. 1985 86 ஆண்டுகள். எங்கள் பகுதியில் திராவிடர் கழகம் வலிமையாக இருந்த காலம் அது! அப்போது மாநில அமைப்புச் செயலாளராக இருந்த கொளத்தூர் மணி அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, தோழர் சித்துசாமி, தோழர் சம்பத், தோழர் பொன்னுச்சாமி, தோழர் அபிமன்யூ, தோழர் பெருமாள் ஆகியோருடன் நானும், நண்பர்கள் சிலரும் தேநீர் கடைக்குச் சென்றோம். தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஒரே குவளையில் தேநீர் கொடுங்கள் என்று கூறிய போது, தேநீர்க்கடை உரிமையாளர் மிகக் கடுமையாக, “சக்கிலிப் பசங்களுக்கெல்லாம் அப்படி டீ தர முடியாது” எனக் கூறினார். உடனே நாங்கள், “அவர்களும் சக மனிதர்கள் தானே” எனக் கூறி புரிய வைக்க முயன்றோம். ஆனால் கடை உரிமையாளர் ஒப்புக் கொள்ளாததால், இரட்டைக்குவளைகளை உடைத்து, கடையை இழுத்து மூடினோம். இரட்டைக்குவளை முறை பின்பற்றப்பட்ட அனைத்துக் கடைகளிலும் இதே போன்ற போராட்டங்களை முன்னெடுத்தோம். பின், அன்றே சேலத்திற்கு சென்று, தீண்டாமை ஒழிப்புப் பிரிவில் வழக்கு பதிவு செய்தோம். அந்தப்போராட்டம் எங்கள் ஊரைச் சுற்றியுள்ள 16 கிராமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பின் எங்கள் பகுதியில் இரட்டைக் குவளை முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

> “ மேட்டூர் முத்துக்குமார், அண்ணாத்துரை, சிவக்குமார் கொளத்தூர் விசு, செட்டியூர் மாரி, காவலாண்டியூர் வீரபத்ரன் ஆகிய தோழர்கள் இந்த வழக்கிற்காக இரண்டு ஆண்டுகளாக மிகுந்த தொல்லைகளையும், சிரமங்களையும் அனுபவித்தனர்.

**ஊர்-சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கெதிராக நீங்கள் முன்னெடுத்த போராட்டம் பற்றி**

தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதி சேரி என்றும் மற்ற உயர் ஜாதியினர் வாழும் பகுதி ஊர் என்றும் அழைக்கப்படுகின்ற ஊர் சேரி என்ற இரட்டை வாழ்விடம் எங்கள் பகுதியிலும் இருந்து வந்தது. அதற்கெதிராக நாங்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிக்கு “நெடுஞ்செழியன் நகர்” என்று பெயரிட்டோம். ஊரையும் சேரியையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, திராவிடர் விடுதலைக் கழகம் சேலத்தில் நடத்திய ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில், ஊர் பகுதியில் எனக்கு சொந்தமான 2 சென்ட் நிலத்தை ஆதிதிராவிடத் தோழருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தேன்.

**தீண்டாமைக்கெதிராக நீங்கள் முன்னெடுத்த மற்ற போராட்டங்கள் பற்றி**

எங்கள் ஊரில் உயர் ஜாதியினருக்கான மாரியம்மன் கோவிலொன்று இருந்தது. அந்தக் கோயிலிருக்கும் தெருவிற்குள்ளும், அந்த கோவிலுக்குள்ளும் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக் கூடாது என்ற தீண்டாமை முறை நிலவி வந்தது. மேலும் அக்கோவிலில் வெட்டும் ஆடுகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் உண்ணக் கூடாது என்ற முறையும் பின்பற்றப்பட்டது. அதற்கெதிராக போராட்டங்கள் நடத்திய பின்பு,



> “அப்பெண் விருப்பப்பட்டால் அழைத்துச் செல்லுங்கள்” என்றார். அப்பெண்ணின் பெற்றோர்கள் அழுது கொண்டு , “ஒரு சக்கிலிப் பையன் கூட போயிட்டியே” என்றனர்.

திராவிடர் கழகம் தன் பகுதியில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனது தமிழாசிரியர் தங்கவேலு அவர்கள் மூலம் பகுத்தறிவுக்கருத்துகளும், பெரியார் இயக்கத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கப்பெற்றவர் காவலாண்டியூர் ஈசுவரன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பெரியாரியலை முழுமையாக ஏற்று அதற்காக முழு நேரமாக இயங்கத் தொடங்கிய ஈசுவரன், தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காகத் தன் பகுதியில் முன்னெடுத்த போராட்டங்கள் ஏராளம். இரட்டைக்குவளை முறைக்கு எதிராகவும், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திய இவர், அதோடு நிற்காமல் பண்பாட்டுத் தளத்திலும் பல போராட்டங்களை நடத்தி, வெற்றியும் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடையூறுகளுக்கிடையே, சில சமயம் அடி உதைகளை வாங்கிக் கொண்டும் எண்ணற்ற ஜாதி மறுப்புத்திருமணங்களை நடத்தி வைத்தவர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சித்துசாமி, அபிமன்யு, பழனிச்சாமி, செட்டியூர் ஈசுவரன், இராஜேந்திரன், விஜயகுமார், சசிக்குமார், இளவரசன், எழிலன் போன்ற பலருடன் இணைந்து இதுவரை 100-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்திவைத்துள்ளார்.

**இரட்டைக் குவளை முறைக்கெதிராக நீங்கள் நடத்திய போராட்டம்பற்றி...**

இரட்டைக் குவளை முறை காவலாண்டியூரில் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. 1985 86 ஆண்டுகள். எங்கள் பகுதியில் திராவிடர் கழகம் வலிமையாக இருந்த காலம் அது! அப்போது மாநில அமைப்புச் செயலாளராக இருந்த கொளத்தூர் மணி அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, தோழர் சித்துசாமி, தோழர் சம்பத், தோழர் பொன்னுச்சாமி, தோழர் அபிமன்யூ, தோழர் பெருமாள் ஆகியோருடன் நானும், நண்பர்கள் சிலரும் தேநீர் கடைக்குச் சென்றோம். தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஒரே குவளையில் தேநீர் கொடுங்கள் என்று கூறிய போது, தேநீர்க்கடை உரிமையாளர் மிகக் கடுமையாக, “சக்கிலிப் பசங்களுக்கெல்லாம் அப்படி டீ தர முடியாது” எனக் கூறினார். உடனே நாங்கள், “அவர்களும் சக மனிதர்கள் தானே” எனக் கூறி புரிய வைக்க முயன்றோம். ஆனால் கடை உரிமையாளர் ஒப்புக் கொள்ளாததால், இரட்டைக்குவளைகளை உடைத்து, கடையை இழுத்து மூடினோம். இரட்டைக்குவளை முறை பின்பற்றப்பட்ட அனைத்துக் கடைகளிலும் இதே போன்ற போராட்டங்களை முன்னெடுத்தோம். பின், அன்றே சேலத்திற்கு சென்று, தீண்டாமை ஒழிப்புப் பிரிவில் வழக்கு பதிவு செய்தோம். அந்தப்போராட்டம் எங்கள் ஊரைச் சுற்றியுள்ள 16 கிராமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பின் எங்கள் பகுதியில் இரட்டைக் குவளை முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

**ஊர்-சேரி என்ற இரட்டை வாழ்விடத்திற்கெதிராக நீங்கள் முன்னெடுத்த போராட்டம் பற்றி**

தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதி சேரி என்றும் மற்ற உயர் ஜாதியினர் வாழும் பகுதி ஊர் என்றும் அழைக்கப்படுகின்ற ஊர் சேரி என்ற இரட்டை வாழ்விடம் எங்கள் பகுதியிலும் இருந்து வந்தது. அதற்கெதிராக நாங்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிக்கு “நெடுஞ்செழியன் நகர்” என்று பெயரிட்டோம். ஊரையும் சேரியையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, திராவிடர் விடுதலைக் கழகம் சேலத்தில் நடத்திய ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில், ஊர் பகுதியில் எனக்கு சொந்தமான 2 சென்ட் நிலத்தை ஆதிதிராவிடத் தோழருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தேன்.

# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

பகுதி - 2



அரசூர் அ.ப.சிவா

இந்துவாய் பிறந்த நான்.
இந்துவாய் சாகமாட்டேன்.
- புரட்சியாளர் அம்பேத்கர்.

நாளை செவ்வாய் கிரகத்திற்கு தமிழக விமான நிலையங்களிலிருந்து பயணிகள் விமானம் செல்லும் என்ற நிலை வந்தாலும், விமான நிலையத்திற்கு எதிரே கடை போட்டு செவ்வாய் தோசம் உள்ளவர்கள் அங்கே செல்லக்கூடாது மீறிச்செல்ல விரும்பினால் எங்களிடம் வாருங்கள் நாங்கள் பரிகாரம் கூறுகிறோம் என்று கூவி விற்கும் மோகன் பகவத்தின் வழித்தோன்றல்கள் கண்டிப்பாய் இருப்பார்கள்.

போற்றுகிற, வழிபடுகிற முறைகளில் தங்கள் தெய்வங்களை கேலியுடன் வணங்குகிற ஒரு மதம். பாலச்சந்தரால் கூட கற்பனை செய்ய முடியாத அசிங்கங்களை கதைகளாய், புராணங்களைக் கொண்டிருக்கிற ஒரு மதம், தன்னைச் சார்ந்திருக்கிற பெரும்பான்மை மக்களை கேவலமாகப் பார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த வழிமுறைதான் புரட்சியாளர் அம்பேத்கர் போன்ற மாமனிதர் களைக்கூட தாழ்த்தப்பட்டவர்களாய் பார்த்து இந்து மதத்திலிருந்து வெளியேற்றியது .

தோழர் பெரியார் அவர்களை தத்துவத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் இன்றைய சூழலில் உரக்கச் சொல்ல வேண்டியிருக்கிறது .

இந்துவாய் பிறந்த நாங்கள் . இந்துவாய் வாழமாட்டேம்

ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் சொல்கிறார், இந்தியாவில் வாழும் வேறு மதத்தைச் சார்ந்தவர்களும்,கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கலாச்சார அடிப்படையில் இந்துக்கள் தான் என்று

நாம் சொல்கிறாம், இந்தியாவில் பிறந்த அறிவியலை பின்பற்றுகிற எவரும் எளிமையாகச் சொல்வதென்றால் காய்ச்சல் தலைவலி வந்தால் இறைவனை நாடாமல் மருத்துவரை நாடுகிற எல்லோரும் நாத்திகரே .

**கோவிலுக்கு வேண்டினால் மொட்டை போட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நவீன நடைமுறையில் நீளமாக வளர்த்த கூந்தலின் ஒரு முனையை மட்டும் வெட்டிவிட்டு அது போதும் என்கிறார்கள் இதில்கூட அவர்களின் மத நம்பிக்கை எங்கேயும் பாதிக்கப்படவில்லை .**

போற்றுகிற, வழிபடுகிற முறைகளில் தங்கள் தெய்வங்களை கேலியுடன் வணங்குகிற ஒரு மதம். பாலச்சந்தரால் கூட கற்பனை செய்ய முடியாத அசிங்கங்களை கதைகளாய், புராணங்களைக் கொண்டிருக்கிற ஒரு மதம், தன்னைச் சார்ந்திருக்கிற பெரும்பான்மை மக்களை கேவலமாகப் பார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த வழிமுறைதான் புரட்சியாளர் அம்பேத்கர் போன்ற மாமனிதர் களைக்கூட தாழ்த்தப்பட்டவர்களாய் பார்த்து இந்து மதத்திலிருந்து வெளியேற்றியது .

தோழர் பெரியார் அவர்களை தத்துவத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் இன்றைய சூழலில் உரக்கச் சொல்ல வேண்டியிருக்கிறது .

இந்துவாய் பிறந்த நாங்கள் . இந்துவாய் வாழமாட்டேம்

ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் சொல்கிறார், இந்தியாவில் வாழும் வேறு மதத்தைச் சார்ந்தவர்களும்,கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கலாச்சார அடிப்படையில் இந்துக்கள் தான் என்று

நாம் சொல்கிறாம், இந்தியாவில் பிறந்த அறிவியலை பின்பற்றுகிற எவரும் எளிமையாகச் சொல்வதென்றால் காய்ச்சல் தலைவலி வந்தால் இறைவனை நாடாமல் மருத்துவரை நாடுகிற எல்லோரும் நாத்திகரே .

அறிவியல் வளர்ச்சி பழமையை அழிப்பது என்பது இயல்பான ஒன்றே..பழமை வாதம் பேசுகிற யாரும் நவீன வாழ்க்கை முறையை நோக்கி நகரவே முடியாது. ஆனால், நவீன வாழ்க்கை முறையில் அறிவியல் வளர்ச்சியின் அடையாளங்களில் இந்து மதம் தன் இருத்தலை உறுதியாக்கிக் கொண்டே வருகிறது .



எடுத்துக்காட்டாய் பல்வேறு கோவில்கள் தங்கள் தரிசன நேரங்களை இணையத்தின் மூலம் முன்பதிவு செய்கிறார்கள். பின்பற்றுவதில் சுலபம், அடிப்படையை விட்டுவிடாத நெகிழ்வுத்தன்மை உடைய எதையும் மக்கள் விட்டு விலகிச் செல்லமாட்டார்கள்..

குறிப்பிட்ட நாளில், நேரத்தில் ஒரு வேலையை பூசை செய்து தொடங்க வேண்டும் என்பது இவர்களின் அடிப்படை. நேரம் குறிப்பது, பூசை செய்வது யாரென்று சொல்லத்தேவையேயில்லை ஆனால், இப்போது நவீன வடிவத்தில் குறிப்பிட்ட நாளில், நேரத்தில் அந்த வேலையை பூசை செய்து தொட்டு விட்டால் போதும் எப்போது வேண்டு மானலும் செய்யலாம் என மாற்றி விட்டார்கள்..

இதில் நன்கு கவனியுங்கள் நல்ல நாள்,நேரம்,பூசை என எதையும் அவன் மாற்றவில்லை. உன்னால் தொடங்க முடியவில்லை என்றால் தொட்டு விடு என்ற அடிப்படையை விட்டுவிடாத நெகிழ்வு தன்மையான வழியைக் கூறுகிறான். இதில் அவனின் இழப்பு ஒன்றுமில்லை, ஆனால் நல்ல நேரத்தை நம்புகிறவர்கள் அவர்களால் கெட்ட நேரமாக கருதுகிற நேரத்தில் அவர்களின் வேலையை தொடர்கிறார்கள் எவ்விதக் கேள்வியும் கேட்காமல் .

கோவிலுக்கு வேண்டினால் மொட்டை போட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நவீன நடைமுறையில் நீளமாக வளர்த்த கூந்தலின் ஒரு முனையை மட்டும் வெட்டிவிட்டு அது போதும் என்கிறார்கள் இதில்கூட அவர்களின் மத நம்பிக்கை எங்கேயும் பாதிக்கப்படவில்லை .

சரி அவர்களை விட்டு நாம் நவீனமாக என்ன செய்யலாம் மதக்கட்டுகளில் இருந்து முழுமையாக வெளியேற செய்யவேண்டியது

# வடமா நிலங்களில் அசுர வேகத்தில் பரவும் அசுரகுலத் தலைவர்களின் விழாக்கள் ‘இராவண மேளா’ ‘மகிசாசுர வீரவணக்கவிழா’

**தமிழில் யாழ்மொழி**

2011 ஆம் ஆண்டு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஃபார்வேர்டு ப்ரஸ் என்ற ஏட்டை நடத்திக்கொண்டிருக்கும் AIBSF மாணவர்கள் ஆயுத பூஜை, சரசுவதி பூஜை, விஜயதசமிக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவனான, அசுரகுல மன்னன் மகிசாசுரன் வீரவணக்கநாள் என்ற விழாவை நடத்தினர். மகிசாசுரன் போல வேடமணிந்து ஆரிய ஆயுஜபூஜைக் கதைகளுக்கு எதிராக துண்டறிக்கைகளையும் விநியோகித்தனர். புதுடில்லியுள்ள அனைத்து ஆங்கில, இந்தி ஏடுகளும் அலறித்துடித்தன. மகிசாசுர நினைவு நாள் செய்தி அனைத்து ஏடுகளிலும் பதட்டத்துடன் முக்கியச்செய்தியாக வெளியிடப்பட்டன. இதுதொடரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் செய்திகள் வெளியாயின. ஆனால் சிறுபொறியாகத் தொடங்கிய இந்த விழா மூன்று ஆண்டுகளுக்குள் வடமாநிலங்களில் அசுர வேகத்தில் பரவி வருகிறது. 2009 லிருந்து கான்பூர் உட்பட பல நகரங்களிலும், கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இராவண மேளாவைக் கொண்டாடி வருகின்றனர். பௌத்த தீக்ஷா வையும் கொண்டாடப் போகின்றனர்.

எளியமக்கள் எளிமையாகக் கொண்டாடி வந்த விநாயகர் சதுர்த்தியை இந்துமத ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான விழாவாக மாற்றி, வெற்றி கண்ட சங் பரிவாரங்கள், அடுத்த முயற்சியாக கிருஷ்ணஜெயந்தியையும் தங்கள் கருவியாகக் கையில் எடுத்துள்ளனர். இந்தச் சூழலில் கிருஷ்ணனையும் கண்ணனையும் வழிபடும் சில தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மக்களை இந்துமதக்கட்டுக்களிலிருந்து விடுவிக்கும் முயற்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த மகிசாசுர வீரவணக்க விழா தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கங்களுக்கு ஒரு விடப்பட்ட அழைப்பாகவே உள்ளது. இராவணலீலாவை நடத்திய தமிழ்நாட்டில் நீண்ட ஒருஇடைவெளி.

சுயமரியாதை கலைபண்பாட்டுக்கழகம் 2013 இல் நடத்திய திராவிடர் வாழ்வியல் விழா இதற்கான ஒரு முன்முயற்சியே. ஒரு அமைப்பு கொண்டாடும் விழா என்ற நிலையிலிருந்து மகிசாசுர வீரவணக்க நாள் போல அடித்தட்டு மக்களுக்கான விழாக்களாக சில விழாக்களை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் முன்னெடுத்த மாவீரர் நாள் இன்று தமிழர்களின் முக்கிய விழாவாக மாறியுள்ளது. அதுபோல திராவிடர் இயக்கப் பார்வையில், இந்து வேத மத எதிர்ப்பு அடிப்படையில் புதிய விழாக்களை அறிமுகப் படுத்தும் முயற்சிகளைத் தொடங்குவோம். மகிசாசுர வீரவணக்கநாள், இராண மேளா குறித்து வடமாநிலங்களில் பல்வேறு ஆங்கில ஏடுகளில் வெளியான தகவல்கள் திராவிடர் இயக்கங்களில் களப்பணியாற்றும் தொண்டர்களின் பார்வைக்காகத் தொகுத்து அளிக்கப்படுகிறது.

*தசரா பண்டிகை காலத்தில், உத்தரப் பிரதேசம், பிகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் ஒடிசாவைச் சுற்றியுள்ள 15 மாவட்டங்களில் நடைபெற்ற துர்கா பூஜையில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. துர்கா பூஜையின் வழக்கமான கதையின்படி, துர்கை மஹிஷாசுரனைக் கொல்வார். அதற்குப் பதிலாக, இம்மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் அந்த “அசுர ராஜா”வைத் தங்கள் நிலத்தின் ராஜா என்றும் ஆரியரல்லாத குடியைச் சார்ந்தவர் என்றும் கூறிக் கொண்டாடுகின்றனர். வழக்கமாக, அந்த பூஜை விஜயதசமி அல்லது ஆயுதபூஜை நாட்களில் “மஹிஷாசுரன் தீயவன் என்றும் துர்கா நல்லவள் என்றும் கூறுவது ஆரியர்கள் மற்றும் பார்ப்பனர்கள் கயிறு திரித்த ஒன்றே!” என்பது இம்மக்கள் கூற்றாகும்.*

*மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மஹிஷாசுரன் மற்றும் துர்காவின் பழைய கதைக்கெதிராக முதல் முறையாக “மஹிஷாசுரன்*

2011 ஆம் ஆண்டு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஃபார்வேர்டு ப்ரஸ் என்ற ஏட்டை நடத்திக்கொண்டிருக்கும் AIBSF மாணவர்கள் ஆயுத பூஜை, சரசுவதி பூஜை, விஜயதசமிக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவனான, அசுரகுல மன்னன் மகிசாசுரன் வீரவணக்கநாள் என்ற விழாவை நடத்தினர். மகிசாசுரன் போல வேடமணிந்து ஆரிய ஆயுஜபூஜைக் கதைகளுக்கு எதிராக துண்டறிக்கைகளையும் விநியோகித்தனர். புதுடில்லியுள்ள அனைத்து ஆங்கில, இந்தி ஏடுகளும் அலறித்துடித்தன. மகிசாசுர நினைவு நாள் செய்தி அனைத்து ஏடுகளிலும் பதட்டத்துடன் முக்கியச்செய்தியாக வெளியிடப்பட்டன. இதுதொடரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் செய்திகள் வெளியாயின. ஆனால் சிறுபொறியாகத் தொடங்கிய இந்த விழா மூன்று ஆண்டுகளுக்குள் வடமாநிலங்களில் அசுர வேகத்தில் பரவி வருகிறது. 2009 லிருந்து கான்பூர் உட்பட பல நகரங்களிலும், கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இராவண மேளாவைக் கொண்டாடி வருகின்றனர். பௌத்த தீக்ஷா வையும் கொண்டாடப் போகின்றனர்.

எளியமக்கள் எளிமையாகக் கொண்டாடி வந்த விநாயகர் சதுர்த்தியை இந்துமத ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான விழாவாக மாற்றி, வெற்றி கண்ட சங் பரிவாரங்கள், அடுத்த முயற்சியாக கிருஷ்ணஜெயந்தியையும் தங்கள் கருவியாகக் கையில் எடுத்துள்ளனர். இந்தச் சூழலில் கிருஷ்ணனையும் கண்ணனையும் வழிபடும் சில தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மக்களை இந்துமதக்கட்டுக்களிலிருந்து விடுவிக்கும் முயற்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த மகிசாசுர வீரவணக்க விழா தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கங்களுக்கு ஒரு விடப்பட்ட அழைப்பாகவே உள்ளது. இராவணலீலாவை நடத்திய தமிழ்நாட்டில் நீண்ட ஒருஇடைவெளி.

சுயமரியாதை கலைபண்பாட்டுக்கழகம் 2013 இல் நடத்திய திராவிடர் வாழ்வியல் விழா இதற்கான ஒரு முன்முயற்சியே. ஒரு அமைப்பு கொண்டாடும் விழா என்ற நிலையிலிருந்து மகிசாசுர வீரவணக்க நாள் போல அடித்தட்டு மக்களுக்கான விழாக்களாக சில விழாக்களை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் முன்னெடுத்த மாவீரர் நாள் இன்று தமிழர்களின் முக்கிய விழாவாக மாறியுள்ளது. அதுபோல திராவிடர் இயக்கப் பார்வையில், இந்து வேத மத எதிர்ப்பு அடிப்படையில் புதிய விழாக்களை அறிமுகப் படுத்தும் முயற்சிகளைத் தொடங்குவோம். மகிசாசுர வீரவணக்கநாள், இராண மேளா குறித்து வடமாநிலங்களில் பல்வேறு ஆங்கில ஏடுகளில்



# JNU in a tangle over Mahisasura

By Mail Today Bureau in New Delhi

AFTER the Ramayan controversy rocked Delhi University, the row over an allegedly offensive pamphlet on Mahisasura is refusing to die down at Jawaharlal Nehru University.

The All India Backward Students' Forum (AIBSF) is planning to hold a protest demonstration against the university administration which sent a show-cause notice to its president Jitendra Kumar Yadav for releasing the pamphlet.

The forum also alleged that the administration is planning to take action against Yadav to prevent him from contesting the university election.

According to the notice, Yadav had been found guilty of releasing an offensive poster depicting a deity in a derogatory manner that led to violent incidents.

Members of the AIBSF and the Akhil Bharatiya Vidyarthi Parishad (ABVP) had clashed earlier this month over posters that were found hurtful by a section of the students.

The posters were circulated by students of the AIBSF based on an article in the Forward Press magazine about the "Dalit viewpoint on Durga-Mahishasura".

On Friday, Yadav along with some students met the university administration. "I read out the essay before the proctor and asked him about the objectionable points. I also told him that whatever has been written in the essay is fact and it was distributed during Durga Puja because of its relevance," Yadav said.

The notice was served after an internal inquiry on the incident of circulating a pamphlet "honouring" Mahisasura found the action hurting the sentiments of a certain section of the students.

Yadav said a fresh inquiry should be conducted in this regard, and the committee should have representatives of various students' forums including AIBSF, NSUI, AISA, SFI and UDSF.

The AIBSF also claimed t[...] students affiliated to the AB[...] had assaulted them.

"We were attacked by AB[...] activists for circulating t[...] poster. Earlier, the admini[...]tration had set up an inqui[...] against the four students w[...] had assaulted us. But, it to[...] a U-turn and is now claimi[...] that I am guilty. We have n[...] insulted goddess Durga in a[...] way and only stated th[...] Mahisasura belongs t[...] a backward community[...]" Yadav added.

The Forward Press magazi[...] defended its article "*Kiski Pu[...] Kar Rahe Hai Bahujan?*" th[...] was published in its Octobe[...] edition, saying allegations th[...] it shows disregard to Durg[...] were undesirable.

The magazine's edito[...] Pramod Ranjan said in a pres[...] statement that the articl[...] emphasises on the evidence[...] and new facts that prove India's oppressed Bahujan society's history, culture and tradition.

The statement reads: "We hence, condemn the violent incident that occurred in thi[...] context and consider it to be a forceful trial to hinder the propagation of knowledge. We also strongly condemn the act of alleging and punishing a student for distributing the copies of the above-men[...]

A section of students at JNU alleged that a pamphlet on Mahisasura was 'offensive'.

வெளியான தகவல்கள் திராவிடர் இயக்கங்களில் களப்பணியாற்றும் தொண்டர்களின் பார்வைக்காகத் தொகுத்து அளிக்கப்படுகிறது.

*தசரா பண்டிகை காலத்தில், உத்தரப் பிரதேசம், பிகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் ஒடிசாவைச் சுற்றியுள்ள 15 மாவட்டங்களில் நடைபெற்ற துர்கா பூஜையில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. துர்கா பூஜையின் வழக்கமான கதையின்படி, துர்கை மஹிஷாசுரனைக் கொல்வார். அதற்குப் பதிலாக, இம்மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் அந்த "அசுர ராஜா"வைத் தங்கள் நிலத்தின் ராஜா என்றும் ஆரியரல்லாத குடியைச் சார்ந்தவர் என்றும் கூறிக் கொண்டாடுகின்றனர். வழக்கமாக, அந்த பூஜை விஜயதசமி அல்லது ஆயுதபூஜை நாட்களில் "மஹிஷாசுரன் தீயவன் என்றும் துர்கா நல்லவள் என்றும் கூறுவது ஆரியர்கள் மற்றும் பார்ப்பனர்கள் கயிறு திரித்த ஒன்றே!" என்பது இம்மக்கள் கூற்றாகும்.*

*மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மஹிஷாசுரன் மற்றும் துர்காவின் பழைய கதைக்கெதிராக முதல் முறையாக "மஹிஷாசுரன் நினைவு நாள்" நிகழ்ச்சி புது தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் மாணவர் பேரவையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது, முதல் முறையாக, பெரிய அளவில் இந்நிகழ்வு அனுசரிக்கப்பட்டுள்ளது.*

*"துர்கா பூஜை" என்று ஒன்பது நாட்கள் நடக்கும் அவ்விழா கெர்வல் பழங்குடியினருக்குக் கொண்டாட்டமாக அல்லாமல் துக்கமாகவே*

2011 ஆம் ஆண்டு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஃபார்வேர்டு ப்ரஸ் என்ற ஏட்டை நடத்திக்கொண்டிருக்கும் AIBSF மாணவர்கள் ஆயுத பூஜை, சரசுவதி பூஜை, விஜயதசமிக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவனான, அசுரகுல மன்னன் மகிசாசுரன் வீரவணக்கநாள் என்ற விழாவை நடத்தினர். மகிசாசுரன் போல வேடமணிந்து ஆரிய ஆயுஜபூஜைக் கதைகளுக்கு எதிராக துண்டறிக்கைகளையும் விநியோகித்தனர். புதுடில்லியுள்ள அனைத்து ஆங்கில, இந்தி ஏடுகளும் அலறித்துடித்தன. மகிசாசுர நினைவு நாள் செய்தி அனைத்து ஏடுகளிலும் பதட்டத்துடன் முக்கியச்செய்தியாக வெளியிடப்பட்டன. இதுதொடரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் செய்திகள் வெளியாயின. ஆனால் சிறுபொறியாகத் தொடங்கிய இந்த விழா மூன்று ஆண்டுகளுக்குள் வடமாநிலங்களில் அசுர வேகத்தில் பரவி வருகிறது. 2009 லிருந்து கான்பூர் உட்பட பல நகரங்களிலும், கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இராவண மேளாவைக் கொண்டாடி வருகின்றனர். பௌத்த தீக்ஷா வையும் கொண்டாடப் போகின்றனர்.

எளியமக்கள் எளிமையாகக் கொண்டாடி வந்த விநாயகர் சதுர்த்தியை இந்துமத ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான விழாவாக மாற்றி, வெற்றி கண்ட சங் பரிவாரங்கள், அடுத்த முயற்சியாக கிருஷ்ணஜெயந்தியையும் தங்கள் கருவியாகக் கையில் எடுத்துள்ளனர். இந்தச் சூழலில் கிருஷ்ணனையும் கண்ணனையும் வழிபடும் சில தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மக்களை இந்துமதக்கட்டுக்களிலிருந்து விடுவிக்கும் முயற்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த மகிசாசுர வீரவணக்க விழா தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கங்களுக்கு ஒரு விடப்பட்ட அழைப்பாகவே உள்ளது. இராவணலீலாவை நடத்திய தமிழ்நாட்டில் நீண்ட ஒருஇடைவெளி.

சுயமரியாதை கலைபண்பாட்டுக்கழகம் 2013 இல் நடத்திய திராவிடர் வாழ்வியல் விழா இதற்கான ஒரு முன்முயற்சியே. ஒரு அமைப்பு கொண்டாடும் விழா என்ற நிலையிலிருந்து மகிசாசுர வீரவணக்க நாள் போல அடித்தட்டு மக்களுக்கான விழாக்களாக சில விழாக்களை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் முன்னெடுத்த மாவீரர் நாள் இன்று தமிழர்களின் முக்கிய விழாவாக மாறியுள்ளது. அதுபோல திராவிடர் இயக்கப் பார்வையில், இந்து வேத மத எதிர்ப்பு அடிப்படையில் புதிய விழாக்களை அறிமுகப் படுத்தும் முயற்சிகளைத் தொடங்குவோம். மகிசாசுர வீரவணக்கநாள், இராண மேளா குறித்து வடமாநிலங்களில் பல்வேறு ஆங்கில ஏடுகளில்




வெளியான தகவல்கள் திராவிடர் இயக்கங்களில் களப்பணியாற்றும் தொண்டர்களின் பார்வைக்காகத் தொகுத்து அளிக்கப்படுகிறது.

*தசரா பண்டிகை காலத்தில், உத்தரப் பிரதேசம், பிகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் ஒடிசாவைச் சுற்றியுள்ள 15 மாவட்டங்களில் நடைபெற்ற துர்கா பூஜையில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. துர்கா பூஜையின் வழக்கமான கதையின்படி, துர்கை மஹிஷாசுரனைக் கொல்வார். அதற்குப் பதிலாக, இம்மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் அந்த "அசுர ராஜா"வைத் தங்கள் நிலத்தின் ராஜா என்றும் ஆரியரல்லாத குடியைச் சார்ந்தவர் என்றும் கூறிக் கொண்டாடுகின்றனர். வழக்கமாக, அந்த பூஜை விஜயதசமி அல்லது ஆயுதபூஜை நாட்களில் "மஹிஷாசுரன் தீயவன் என்றும் துர்கா நல்லவள் என்றும் கூறுவது ஆரியர்கள் மற்றும் பார்ப்பனர்கள் கயிறு திரித்த ஒன்றே!" என்பது இம்மக்கள் கூற்றாகும்.*

*மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மஹிஷாசுரன் மற்றும் துர்காவின் பழைய கதைக்கெதிராக முதல் முறையாக "மஹிஷாசுரன் நினைவு நாள்" நிகழ்ச்சி புது தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் மாணவர் பேரவையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது, முதல் முறையாக, பெரிய அளவில் இந்நிகழ்வு அனுசரிக்கப்பட்டுள்ளது.*

*"துர்கா பூஜை" என்று ஒன்பது நாட்கள் நடக்கும் அவ்விழா கெர்வல் பழங்குடியினருக்குக் கொண்டாட்டமாக அல்லாமல் துக்கமாகவே இருந்துள்ளது. "இம்முறை தான், மஹிஷாசுரன் மற்றும் துர்கா கதை பற்றி எங்கள் மக்கள் மத்தியில் அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது", என்று மேற்கு வங்க புருலியா மாவட்டத்தில் மஹிஷாசுரன் இறப்பு தினத்தை ஏற்பாடு செய்கின்ற அஜித் பிரசாத் ஹெம்ப்ரம் என்ற ஒரு*

நூல் அறிமுகம்

# “ம.பொ.சியும் ஆதித்தனாரும் தமிழ்த்தேசியத் தலைவர்களா?”

–மே.கா.கிட்டு

*பெரியாரின் 136ஆம் ஆண்டு பிறந்தநாள் (17.09.2014) வெளியீடாக “ம.பொ.சியும் ஆதித்தனாரும் தமிழ்தேசியத் தலைவர்களா?” என்ற நூல் தோழர் வாலாசாவல்லவன் அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.*

*இன்றைய நாளில் தமிழ்த்தேசியம் பேசுவோர்கள் உயர்த்திப்பிடிக்கும் ம.பொ.சி, ஆதித்தனார் ஆகியோர் உண்மையிலேயே தமிழ்த்தேசியத் தலைவர்கள்தானா? என்பதை வெட்டியும், ஒட்டியும் எழுதாமல் அவர்களின் எழுத்துக்கள், பேச்சுக்களையே ஆதாரமாகக் கொண்டு இவர்களின் உண்மை முகத்தை வெட்டவெளிச்சமாக்கியுள்ளார் தோழர் வாலாசாவல்லவன். இந்த ம.பொ.சி, ஆதித்தனார் ஆகியோரின் தமிழர் எதிர்நடவடிக்கைகளை விரிவாகப் பட்டியலிட்டுள்ளார் ஆசிரியர்.*

*1938 இல் நடந்த இந்தி எதிர்ப்புப்போரில் அன்றைய முதல்வர் இராஜாஜி, பெரியாரை 1908ல் கொண்டுவந்த 124 ஏ குற்றவியல் சட்டத்தின்படி பெரியாரை யாரும் பார்க்கக் கூடாது என்ற எண்ணத்தில் பெல்லாரி சிறையில் அடைத்தார். அப்பொழுது இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு எதிரான போராட்டம் நடத்தியவர்தான் ம.பொ.சி.*

*ம.பொ.சி காங்கிரசிலிருந்தபோதே, 1946 ல் ‘தமிழரசுக்கழகம்’ என்ற பெயரில் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு இந்திய ஒற்றுமை, மாநில சுயாட்சி என்று அறிவித்துக்கொண்டவர்தான். 1950 51 ல் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி வகுப்புவாரி உரிமை செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் அறிவித்ததால், தமிழ்நாட்டில் மிகப்பெரிய போராட்டம் வெடித்தது. அந்தக்காலகட்டத்தில் வகுப்புவாரி உரிமைக்கு ஆதரவாக ஒரு வார்த்தைகூடப் பேசாதவர் ம.பொ.சி.*

*1953 ல் குலக்கல்வித்திட்டம் கொண்டு வந்தபோது, அந்த வர்ணாசிரம கல்வித் திட்டத்தை ஆதரித்தும் வரவேற்றும் 28.07.1953 அன்று சட்டமன்ற மேலவையில் மிக நீண்ட உரையாற்றியவர் ம.பொ.சி.*

*1956 ஜனவரி 11 ஆம் நாள் இந்தி ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவர் பி.ஜி.கெர் அவர்களிடம் மத்திய ஆட்சிமொழி பற்றி சாட்சியமளித்த ம.பொ.சி “இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்பதை தமிழரசுக்கழகம் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசாங்கத்தின் நிர்வாக மொழியாகவும், மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியா கவும், சுப்ரீம் கோர்ட்டின் நடவடிக்கைகளுக்கும் இந்திமொழியையே பயன்படுத்தவேண்டும். முடிந்தவரை பார்லிமெண்ட் நடவடிக்கைகளும் இந்தியிலேயே இருக்கலாம். தமிழகப் பள்ளிகளில் இந்தியை விருப்பப்பாடமாக வைக்கலாம்" என்று சாட்சியம் அளித்தவர்.*

*ஆதித்தனார் அவராகவே விரும்பி தி.மு.க வில் இணைந்தவர். 1967 தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன், அவைத்தலைவராக ஆதித்தனாரை நியமித்தனர். 1969 ல் அமைச்சரானார். 1972 ல் போட்டியிட்டு, வெற்றி பெற்று மீண்டும் அமைச்சரானார். 1980 தேர்தலில் இவருக்கு போட்டியிட வாய்ப்பே கிடைக்க வில்லை என்பதால் எம்.ஜி.ஆரிடம் ஓடிச்சென்று, அ.தி.மு.க வில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டார். பதவி வெறியரான இவர்தான் இன்னொரு தமிழ்த்தேசியத் தலைவர்.*

*இந்திவெறியர் ம.பொ.சியும், பதவி வெறியர் ஆதித்தனாரும்தான் இன்றைய தமிழ்த்தேசிய வாதிகள் பெரும்பாலோருக்குத் தலைவர்களாய்த் தெரிகிறார்கள். சுதந்திரத் தமிழ்நாடு அடைந்தே தீருவேன் என்று இறுதிவரை போராடிவந்த பெரியார், இவர்களுக்குத் துரோகியாகத் தெரிகிறார் என்று வேதனையுடன் முடித் துள்ளார் நூலாசிரியர்.*

*‘பெரியாரைக் கண்ணைமூடிக்கொண்டு விமர்சிக்கும் திடீர் தமிழ்த்தேசியர்களுக்கு பதிலளிக்க ஏராளமான தரவுகளை இந்நூல் தந்துதவும். தமிழ்த்தேசியம் பேசுபவர்கள், தங்களது தவறுகளைத் திருத்திக்கொள்ள இந்த நூல் மிகவும் பயன்படும். தோழர் வாலாசா வல்லவன் அவர்களின் கடும் உழைப்பில் உருவாக்கப்பட்ட இந்நூல் பெரியாரிஸ்ட்டுகள் அனைவரது இல்லத்திலும், நூலகங்களிலும் அவசியம் இருக்கவேண்டிய நூலாகும்.*

*தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்: 4/11, சி. என். கே. சந்து, சேப்பாக்கம், சென்னை 600 005 அலைபேசி: 7299214554, 9444321902*

# அரபிக்கடலோரம் முத்தப்புயல்.... நாடெங்கும் அன்பு மழை

- அதி அசுரன்



கேரளாவின் கோழிக்கோட்டில் உள்ள ஒரு ஓட்டலில் இளம் மாணவர்கள் சிலர் தமது அன்பை வெளிப்படுத்தும் விதத்தில் முத்தமிட்டுக்கொண்டனர். இதனால் ஆவேசமடைந்த யுவமோர்ச்சா என்ற இந்துமதவாத அமைப்பினர் அந்த ஓட்டலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். மதவாதிகளின் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து மாணவர்களும், இளைஞர்களும் கொச்சியில் உள்ள மெரைன் டிரைவ் பகுதியில் நவம்பர் 2ம் தேதி மாலை முத்தம் கொடுக்கும் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தனர். பேஸ்புக்கில் அறிவிப்பு வெளியானது. இந்த முத்தப்புரட்சியை எதிர்த்து மதவாத அமைப்புகள் அனைத்தும் ஒன்றுதிரண்டன. காவல்துறையும் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் காவல்துறையின் அடக்குமுறைகளையும் மீறி காவல் வாகனங்களுக் குள்ளேயே முத்தமழை பெய்தது.

கோழிக்கோட்டில் மய்யம் கொண்ட Kiss of Love, Hug Of Love ஆகிய பெயர்களைக்கொண்ட இந்த முத்தப்புயல் புதுடெல்லி, கல்கத்தா, ஜாதாப்பூர் என நாடெங்கிலும் உள்ள கல்வி நிறுவனங்களிலும் பரவியது. பெங்களூரில் நவம்பர் 22, புயல் மையம்கொண்ட கோழிக் கோட்டில் உள்ள தெருக்களில் மீண்டும் டிசம்பர் 7 என போராட்டம் தீவிரமடைகிறது. சென்னை ஐஐடி யிலும் முத்தமழை பெய்தது. அகில இந்திய அளவில் மதவாதிகளை அதிர்ச்சியடைய வைத்தது இந்த முத்தப்புரட்சி. தமிழ்நாட்டில் ஐஐடியில் நடந்த உடனேயே நமது இந்துப்பண்பாட்டுக்காவலர் டாக்டர் இராமதாஸ், இந்துமுன்னணி இராமகோபாலன் ஆகியோர் அலறித்துடித்தனர்.

டாக்டர் இராதாஸ் அவர்கள் கொடுத்த அறிக்கையில், “பொது இடங்களில் முத்தம் கொடுப்பதைத் தடுப்பது தங்களின் சுதந்திரத்தில் தலையிடும் செயல் என்று கூறிக் கொண்டு கேரளத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் அன்பு முத்தம் என்ற பெயரில் பொது இடங்களில் கூடி கட்டியணைத்து முத்தம் கொடுக்கும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பொது இடங்களில் குப்பை போடுவது குற்றம்; பொது இடங்களில் எச்சில் துப்புவது குற்றம்

என்று சட்டமும், சான்றோர்களும் கூறுகின்றனர். அவ்வாறு இருக்கும் போது அவற்றைவிட அதிக பாதிப்பை ஏற்படுத்தும் 'பொது இடங்களில் கட்டியணைத்து முத்தம் கொடுக்கும் செயலை' எவ்வகையில் அனுமதிக்க முடியும் என்று தெரியவில்லை.

சென்னை ஐ.ஐ.டி.யில் பயிலும் மாணவ, மாணவியரில் பெரும்பான்மையானோர் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமிழ்க் கலாச்சாரம் குறித்து அறியாமல் இதைச் செய்திருக்கலாம். இதைப் பின்பற்றி தமிழகத்திலுள்ள மற்ற கல்வி நிறுவனங்களின் மாணவர்களும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டால், அது நினைத்துப்பார்க்கவே முடியாத மோசமான கலாச்சார மற்றும் பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்திவிடும்." என்று கூறியுள்ளார்.

ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளவே முடியாத நிலையை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கி, இன்றுவரை நிலைநிறுத்தி வைத்திருப்பது இந்துமதம். அது இந்துமதத்தின் பண்பாடு. ஒருவருக்கொருவர் தொட்டுப் பேசுவதும், பொது இடங்களில் கட்டியணைப் பதும், முத்தமிடுவதும் தமிழர் பண்பாடு. அந்தத் தமிழர் பண்பாடுதான் பழைய சேரநாட்டுப் பண்பாட்டின் மிச்ச சொச்சங்களாக இன்று கோழிக்கோட்டில் வெளிப்பட்டுள்ளது.

ஐஐடி யில் படிப்பவர்கள் வெளிமாநிலத் தவர்கள். அதனால் அவர்களுக்கு தமிழ்ப் பண்பாடு தெரியவில்லை என அலறும் மருத்துவர் அவர்களே, உண்மையில் தமிழர் பண்பாடு அறியாமல் அலறுவது நீங்கள்தான். பொது இடங்களில் கட்டியணைப்பது Hug Of Love தமிழர் பண்பாடா? ஆம். சங்க இலக்கியங்களைப் படியுங்கள். அவற்றில் பல இடங்களில் **'துணங்கைக்கூத்து'** என்று ஒருவகை கூத்து பற்றி பல பாடல்கள் விரிவாகப் பேசியுள்ளன. குன்றக்குரவை, ஆராய்ச்சிக்குரவை என்றெல்லாம் பலவகை கூத்துக்கள் உள்ளன. இவை அனைத்தும் பொதுவெளியில் நடைபெறும் ஆடல் பாடல், கட்டியணைத்தல்தான். ஆனாலும் அவை கடவுளர் தொடர்பான சடங்குகளின் ஒரு வடிவ மாகத்தான் வருகின்றன. ஆனால் **'துணங்கைக் கூத்து'** அப்படி அல்ல. முழுமையாக மதச்சடங்குகள் நீங்கிய ஒரு கூத்துவகை இது. பொது வெளியில் ஆணும் பெண்ணும் கட்டியணைத்து ஆடும் நடனம் இது.

> **ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளவே முடியாத நிலையை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கி, இன்றுவரை நிலைநிறுத்தி வைத்திருப்பது இந்துமதம்.**

பதிற்றுப்பத்து என்ற தொகுப்பில் சிறுசெங் குவளை என்ற தலைப்பில் உள்ள ஒரு பாடல். சேர நாட்டில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற மன்னன் ஒரு பெண்ணுடன் ஆடிய துணங்கைக்கூத்து பற்றிக் கூறுகிறது. இந்தப் பாடலைப் பாடியவர் ஒரு பெண் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்க செய்தி. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்பது அவரது பெயர். அந்தப் பாடலில் குறிப்பிடப்படும் துணங்கைக்கூத்தில் சேரமன்னன் தனது மனைவி அல்லாத வேறு ஒரு பெண்ணுடன் நடனமாடுகிறான். ஒரு கரத்தால் அவளது கரத்தைப்பற்றிக்கொண்டு, மறுகரத்தால் அவளது இடுப்பை இறுகப்பற்றிக்கொண்டு நடனமாடுகிறான். தனது அரசியே பொறாமைப்படும் அளவுக்கு பொது இடத்தில் மற்றொரு பெண்ணைக் கட்டியணைத்து நடனமாடியிருக்கிறான்.

பதிற்றுப்பத்தில் மட்டுமல்ல. பாணர்கள் ஆணும் பெண்ணுமாக இணைந்து பொதுவெளியில் நடனமாடுவதும், கட்டியணைப்பதும், கவிதை பாடுவதும் தமிழர் நாடுகளெங்கும் பரவி வாழ்ந்ததையும் புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை என எந்த சங்க இலக்கிய நூல்களில் வேண்டுமானாலும் காணலாம். குறிப்பாக திருக்குறளில் காமத்துப்பால் என்று தனி தொகுப்பையே எழுதியுள்ளாரே திருவள்ளுவர். அதில் பல குறள்கள் முத்தத்தைப் பற்றியும் வெளிப் படையாகவே பேசியுள்ளன.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர் - குறள் 1121

அதாவது, இனியமொழி பேசுகின்ற இவளுடைய வெண்முத்துப் பற்களிடையே சுரந்து வரும் உமிழ்நீர், பாலும் தேனும் கலந்தாற்போல் சுவை தருவதாகும்.

என்று கூறுகிறது குறள். முத்தத்தை எவ்வளவு ஆழமாக, அழுத்தமாக, தெளிவாக



உணர்ந்திருக்கிறார் வள்ளுவர்? முத்தம் எப்படிக் கொடுக்க வேண்டும்? அது எப்படி அமைய வேண்டும் என்று ஒரு பாடமே நடத்துகிறதே இந்தக் குறள்? இது சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கலைஞர் அவர்களின் முயற்சியால் கல்வெட்டில் செதுக்கப்பட்டு இலட்சக்கணக் கானோரால் பார்வையிடப் பட்டும் வருகிறது. பொதுவெளியில் தான் உள்ளது.

இதுதான் தமிழர் பண்பாடு. காலப்போக்கில் ஆரியர் வருகைக்குப் பிறகு இந்த விரசமில்லாத பண்பாடு அழிக்கப்பட்டு, கட்டுப்பெட்டித்தனமான ஆரியப் பண்பாடு புகுத்தப்பட்டது. அதன் விளைவாகத்தான் இன்று டாக்டர் இராமதாசு போன்றவர்கள் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றப் போகிறேன் என்று கூறிக்கொண்டு ஆரியப்பண்பாட்டுக்குக் காவல்காரர்களாய் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த முத்தப்போராட்டம் காதலர்கள் மட்டுமே பங்கேற்று நடத்தப்படுவதும் இல்லை. நண்பர்கள், கணவன் - மனைவி, அப்பா - மகள், அண்ணன் - தங்கை, அக்காள் - தம்பி, அம்மா - மகன் என பல உறவுகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர். இதில் என்ன பண்பாட்டுச் சீரழிவைக் கண்டுவிட்டார்களோ தெரியவில்லை?

இது அந்நியக் கலாச்சாரம் என்று ஒரு வாதமும் வைக்கப்படுகிறது. இதில் அந்நியக் கலாச்சாரம் என்பதெல்லாம் எதுவும் இல்லை. தமிழர் பண்பாட்டு மீட்புப் போராட்டம் என்று வேண்டுமானால் இதைச் சொல்லலாம். ஆனால் நமது கேள்வி என்னவென்றால், இந்த நாட்டை முழுக்க முழுக்க அந்நிய நாட்டு பன்னாட்டுக் கம்பெனிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டது இந்த அரசு. இந்திய நாட்டுச் செல்வங்களையும் அதிகாரங்களையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மடை மாற்றும் பணி சரியாக நடக்கிறதா எனக் கண்காணிக்க - உலக வங்கி தனது விசுவாசமான பணியாளர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கிறது. இந்த நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் தலைமைப் பீடங்களில் பொருளாதார ஆலோசகர்கள் என்ற பெயரில் அவர்கள் அமர்ந்துள்ளனர்.

கடந்த காங்கிரசு ஆட்சிக்காலத்தில் பிரதமருக்கு பொருளாதார ஆலோசகராக இரகுராமன் கோவிந்தராஜன் இருந்தார். தற்போது பா.ஜ.க ஆட்சியில் மோடி அரசுக்கு பொருளாதார ஆலோசகராக அரவிந்த் சுப்பிரமணியன் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் பொருளாதார ஆலோசகர் இரகுராமன் ராஜன் தற்போது ரிசர்வ் வங்கியின் ஆளுநராக பதவி வகிக்கிறார். இவர்கள் இருவருமே உலகவங்கியில் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி ஒட்டுமொத்தமாக நாட்டை அந்நியர்களிடம் அடகுவைத்து விட்டு, அய்யோ அந்நியக் கலாச்சாரம் என்று அலறுவதில் என்ன நேர்மை இருக்கிறது?

மாணவர்களால், இளைஞர்களால் தொடங்கப்பட்ட இந்த முத்தப்புயலால் நாடெங்கும் மதவெறி வறட்சிக்கு எதிராக அன்புமழை பொழியட்டும். தமிழ்ப்பண்பாட்டை மீட்க விரும்புவோரும், அறிவியல் பண்பாடு மற்றும் திராவிடர் பண்பாட்டை வாழ்வியலாகக் கடைபிடிக்க விரும்புவோரும் முத்தப்புரட்சியை வரவேற்போம். தமிழர் பண்பாட்டை மீட்டெடுக்க விரும்புவோர் தமிழ்நாட்டில் முத்தப்போராட்டத்தை நடத்த முன்வரவேண்டும். இது பெரியார் மண் என்பதை உறுதிப்படுத்தத் துடிப்பவர்களும் இந்தப் போராட்டத்தை தமிழ்நாட்டில் நடத்த முயற்சி எடுக்கவேண்டும். குறைந்தபட்சம் முகநூலிலாவது முத்த செல்ஃபிக்களை Profile Picture ஆகவோ Cover Photo ஆகவோ வெளியிடவேண்டும். முத்த செல்ஃபிக்களால் தமிழர்களின் - திராவிடர்களின் முகநூலிலாவது முத்தமழை பொழியட்டும்!

# மாணவர் உரிமையைப் பெற்றுத்தரும் தொடர்பணியில் TSF

மத்திய அரசின் கல்வி உரிமைச்சட்டம் RTE நமது அடிப்படை கல்வி உரிமையை உறுதிசெய்துள்ளது. மிகப்பெரும் தனியார் பள்ளிகள் தமது பள்ளிக்கு அருகாமையில் உள்ள ஏழை மாணவர்களுக்கு அவசியம் அனுமதி வழங்கவேண்டும். குறைந்தபட்சம் 25 சதவிகித இடங்களை பள்ளிக்கு அருகிலுள்ள ஏழை மாணவர்களுக்கு வழங்வேண்டும் என வலியுறுத்துகிறது. ஒவ்வொரு துறையிலும் உள்ள சட்டங்களையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் முறையாகப் பின்பற்றினாலே நாட்டில் ஓரளவு சிக்கல்கள் குறையும். என்னதான் சட்டங்கள் போட்டாலும் அவை வழக்கம்போல நடைமுறைக்கு வருவதில்லை. எனவே, இந்த கல்வி உரிமைச் சட்டம், அருகாமைப் பள்ளி முறை நடைமுறையில் உள்ளதா? எனக் கண்டறியயும், நடைமுறைப்படுத்தவும் தமிழ்நாடு மாணவர் கழகம் முயற்சி எடுத்துள்ளது.

முதற்கட்டமாக, ஈரோடு மண்டல தமிழ்நாடு மாணவர் கழகம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் RTI கீழ் ஈரோடு, நாமக்கல், திருப்பூர், சேலம் மாவட்டங்களிலுள்ள பள்ளிகளில் அருகாமைப் பள்ளிமுறை நடைமுறையில் உள்ளதா? அந்த ஏழை மாணவர் ஒதுக்கீட்டின்படி அனுமதி பெற்ற மாணவர்களின் பட்டியல் என்ன? என்பது போன்ற விபரங்களைப் பெற்றது. மிக நீண்ட போராட்டங்களுக்குப் பிறகே இந்தத் தகவல்கள் கிடைத்தன.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி வாங்கப் பட்ட அந்த பட்டியலில் உள்ள மாணவர்களை விசாரித்த போது அவர்களிடம் அந்த தனியார் பள்ளிகள் கட்டணம் வாங்கி கொண்டு இருப்பது தெரியவந்தது. இந்தத் தனியார் பள்ளிகளின் மோசடிகளை விளக்கி பெற்றோரிடம் மாணவர் கழகம் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் வாங்கப்பட்ட பட்டியல் ஈரோடு, நாமக்கல், கோபி, திருப்பூர், சேலம் பகுதியில் உள்ள திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப் பாளர்களிடமும் வழங்கப்பட்டது.

அந்த விவரங்கள் மூலம் ஈரோடு தி.வி.க. தெற்கு மாவட்டச் செயலாளர் சண்முகப்பிரியன் அவர்களின் பெரும் முயற்சியால் ஈரோடு பகுதியில் உள்ள தனியார் பள்ளிகளில் 10 மாணவர்களுக்கு 25% இடம் ஒதுக்கீட்டின்படி இலவசமாக அனுமதி வழங்கப்பட்டது.

இதே விவரங்கள் மூலம் கோபிச்செட்டிபாளையம் பகுதியில் கோட்டப் பொறுப்பாளர் ஆனந்த், ஈரோடு வடக்குமாவட்ட செய்தித் தொடர்பாளர் மாவட்ட ப.இரவிக் குமார் ஆகியோரின் பெரும் முயற்சியால் 4 மாணவர்களுக்கு கல்வி உரிமை கிடைத்தது.

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மூலம் வாங்கப்பட்ட அந்த மாணவர் களின் பட்டியலை ஈரோட்டில் உள்ள அன்னை சத்யா நகரில் அப்படியே பிளக்ஸில் (விளம்பர தட்டி) அச்சிட்டு விளம்பரப்படுத்தினார் ஈரோடு தி.வி.க மாநகர செயலாளர் சிவானந்தம்.

குமாரபாளையம் நகர தி.வி.க தலைவர் தண்டபாணி அவர்களின் முயற்சியால் குமாரபாளையம் தோழர்.அண்ணாதுரை அவர்களின் இரண்டு பெண்கள் அறிவுச் செல்வி, சங்கத்தமிழ் இரண்டுபேர் 92.(அரசாணை) படி கட்டணம் இன்றி திருச்செங்கோடு ஆளுகூ கல்லூரியில் சேர்க்கபட்டனர்.

*கல்வி உரிமைச்சட்டம், தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆகியவைகளை முறையாகப் பயன்படுத்தி பல மாணவர்களுக்குக் கல்வி உரிமையைப் பெற்றுத்தந்த கூளுகு தமிழ்நாடு மாணவர்கழகம், தொடர்ச்சியாக வகுப்புவாரி உரிமை, ஜாதிவாரி இடஒதுக்கீடு தொடர்பாக அவற்றால் பல ஆண்டுகளாகப் பலன் அடைந்துவரும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் முயற்சியிலும் ஈடுபடுகிறது.*

*வகுப்புவாரி உரிமை குறித்த மாணவர் விவாத அரங்கம் 18.09.14 இல் ஈரோட்டிலும், 17.10.14 இல் மேட்டூரிலும் நடைபெற்றது. இவற்றில் தி.வி.க தலைவர் தோழர் கொளத்தூர் மணி, தோழர்கள் இராம.இளங்கோவன், பொள்ளாச்சி விஜயராகவன், தி.தாமரைக்கண்ணன், மேட்டூர் அ.சக்திவேல், மே.கா.கிட்டு ஆகியோர் பங்கேற்றனர். களப்பணியில் எங்களுக்குத் தோள்கொடுக்குமாறு மாணவ சமுதாயத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.*

-ஈரோடு வெங்கட், 95788 44141

---

# இலக்குகளை நிர்ணயித்து, வெற்றி பெற்று வளர்ந்த இயக்கம்: ‘திராவிடர் விவசாயத் தொழிற்சங்கம்’ சட்ட எரிப்புப்போராளி நாகை எஸ்.எஸ். பாட்சாவின் நேர்காணல்

*“ தோழர் பெரியாரின் அறைகூவலை ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைக் கொளுத்திய 10, 000 க்கும் மேற்பட்ட திராவிடர் கழகத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர். 3000 க்கும் மேற்பட்ட தோழர்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக கடுங்காவல் தண்டனையை அனுபவித்தனர். அந்த ஜாதிஒழிப்புப் போராளிகளில் ஒருவரே, மறைந்த நாகை எஸ். எஸ்.பாட்சா.*

1957 நவம்பர் 26 ஆம் நாள். ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டம் கொளுத்தப்பட்ட நாள்.. அரசியல் சட்ட எரிப்புப்போராட்டத்திற்கு முன்னதாக பெரியார் விடுத்த அறிக்கையில்.

> “இன்று அரசியல் சட்டத்தைக் கொளுத்துகிறோம் என்றால், எதற்காக? அதில் சாதிக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதற்காகத்தான். சாதி உள்ள வரையில் தீண்டாமை ஒழியுமா? ஒழிந்திருக்கிறதா? அரசியல் சட்டத்திலுள்ள தீண்டாமை ஒழிப்பு விதிகூட, டாக்டர் அம்பேத்கார் அவர்களைத் திருப்தி படுத்துவதற்காகவே தவிர, உண்மையான நோக்கத்துடனல்ல. இதை உணர்ந்துதான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்கூட, “இந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும். நானே இதை கொளுத்தப் போகிறேன்” என்று ராஜாங்க சபையில் 3.9.1953-லேயே கூறினார். அதன் பிறகு இரண்டாண்டு கழித்துத்தான் சுமார் மூன்று லட்சம் ஆதித்திராவிடரை பவுத்த நெறியில் சேர்த்து விட்டுத் தாமும் அதைத் தழுவினார். இதன் விளைவாகத்தான் அவரைத் தந்திரமாகக் கொலை செய்தார்கள் இந்துமத வெறியர்கள். ஆகவே, அரசியல் சட்டம் ஆதித்திராவிடரின் தீண்டாமையொழிப்புக்குக்கூடப் பயன்படவில்லை என்பதற்கு டாக்டர் அம்கேத்காரை விடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறென்ன வேண்டும் என்று கேட்கிறோம்.
>
> இப்படிப்பட்ட காரணங்களால் இந்த நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு அமைப்பு, சாதி, மதம்

ஆகியவை காரணமாக, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவை அளிக்கப்படாததா யிருப்பதால், இவைகளை முன்னிட்டு இந்த அரசியல் சட்டம் இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்குக் கேடானது என்று கருதுவதால், இக்கேடுகளுக்கு ஒரு தெளிவான பரிகாரமோ, விளக்கமோ இன்று முதல் 15 நாள் வாய்தாவுக்குள் இந்த அரசாங்கம் மக்களுக்கு அளிக்கா விட்டால், இந்த அரசியல் சட்டத்தை எதிர்த்து ஒழிக்கும் முயற்சியின் அறிகுறியாக, 1949 நவம்பர் 26-ந் தேதி என்ற அரசியல் சட்ட பிறப்பு நாள் வைத்து - இந்த நவம்பர் மாதம் 26-ந் தேதியன்று மாலையில் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாத திராவிடராலும் இச்சட்டம் நெருப்பிலிட்டுக் கொளுத்தத்தக்கது என்று இம்மாநாடு பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.”

‘விடுதலை’ தலையங்கம் 11. 11. 1957

என்று அறைகூவல் விடுத்தார். தோழர் பெரியாரின் அறைகூவலை ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைக் கொளுத்திய 10, 000 க்கும் மேற்பட்ட திராவிடர் கழகத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர். 3000 க்கும் மேற்பட்ட தோழர்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக கடுங்காவல் தண்டனையை அனுபவித்தனர். அந்த ஜாதிஒழிப்புப் போராளிகளில் ஒருவரான, மறைந்த நாகை எஸ். எஸ்.பாட்சா அவர்களின் நேர்காணலை இந்த நவம்பர் மாத இதழில் வெளியிடுகிறோம். இந்த நேர்காணல் திராவிடர் விடுதலைக்கழகத்தலைவர் தோழர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் தோழர் விடுதலை. இராசேந்திரன் ஆகியோரால் 24. 07. 2007 அன்று தோழர் எஸ். எஸ்.பாட்சா அவர்களின் இல்லத்தில் பதிவு செய்யப்பட்டதாகும். அதில் சுருக்கமாக சில தகவல்களை மட்டும் வெளியிடுகிறோம்.

பெரியார் வெறும் பிரச்சாரம் மட்டும்தான் செய்தார். பிரச்சாரத்தாலேயே சமுதாயம் மாறிவிட்டது. பெரியார் இலக்கு நிர்ணயித்து, திட்டமிட்டு, எந்தப் போராட்டத்தையும் அறிவிக்கவில்லை. வரலாற்றில் அப்படி எதுவும் நடக்கவும் இல்லை. அப்படி ஒரு வெற்றியை அவர் பெற்றதும் இல்லை என்று ‘பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதங்கள்’ அண்மையில் அரங்கேறியுள்ளன. அந்த வாதங்களுக்கு எமது விளக்கங்களாகவும் இந்த நேர்காணல் வெளியிடப்படுகிறது. தொடர்ச்சியாக காட்டாற்றில் எமது விளக்கங்கள் வெளியாகும். எமது கருத்துக்கள் தவறாக இருக்குமானால் அவசியம் காட்டாறுக்கு உங்கள் விமர்சனங்களை அனுப்புங்கள். எங்களைச் சரிபடுத்திக்கொள்ள அது ஒரு வாய்ப்பாக அமையும்.

> “ *சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகமாக மாறியபோது பேச்சாற்றல், செயலாற்றல் என மிகப் பெரிய விலாசமாக வேகமாக வளரும்போது இவர்கள் ஏழை, எளியவர்களுக்கு போராடவில்லை என்கிற மாதிரி தோற்றத்தை அப்போதே பொதுவுடமைக் கட்சியினர் பிரச்சாரம் செய்தனர்.*

**கேள்வி: திராவிடர் விவசாய தொழிற்சங்கம் பற்றி ?**

***பதில் :*** *நாம் சுயமரியாதை இயக்கம் 1926 ல் ஆரம்பித்தோம். சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையே சாதியற்ற சமுதாயம், மதமற்ற சமுதாயம், பேதமற்ற சமுதாயம் எல்லாம் இருக்கணும். இதுதான் அடிப்படை நம்ம கட்சியில யார் யார் முதன்முதலாக வந்து சேர்ந்தார்கள் என்றால் ஆதிதிராவிடர்கள், நாவிதர்கள், வண்ணார்கள், நாடார்கள் இப்படி சமுதாயத்தில் யாரெல்லாம் ஒடுக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு இருந்தார்களோ அவர்கள்தான் பெரியாரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். முஸ்லீம்கள், கிறித்துவர்கள் என எல்லோரும் பெரியாரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். இவர்கள் எல்லாமே பற்றுக்கோலாக ஒரு பலம் வாய்ந்த தலைவன் பெரியாரைத் தவிர இல்லை எனக் கூறி பெரியாரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். இந்த இயக்கம் வேகமாக வளரும் போது, நாங்கள் தான் தொழிலாளர்களுக்குப் போராடுகிறோம் என்கிற மாதிரி சிந்தனையை சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகமாக மாறியபோது பேச்சாற்றல், செயலாற்றல் என மிகப் பெரிய விலாசமாக வேகமாக வளரும்போது இவர்கள் ஏழை, எளியவர்களுக்கு போராடவில்லை என்கிற மாதிரி தோற்றத்தை அப்போதே பொதுவுடமைக் கட்சியினர் பிரச்சாரம் செய்தனர். அந்தச் சூழலில் 1952 இல் உருவாக்கப்பட்டது திராவிடர் விவசாயத் தொழிற்சங்கம்.*

*யாரெல்லாம் ஒடுக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு இருந்தார்களோ அவர்கள்தான் பெரியாரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். முஸ்லீம்கள், கிறித்துவர்கள் என எல்லோரும் பெரியாரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.*

**கேள்வி: திராவிடர் விவசாயத் தொழிற்சங்கத்தின் சாதனைகள் என்ன?**

முதல் பலன் என்ன கிடைத்தது என்றால், சாணிப்பால், சவுக்கால் அடித்தது எல்லாமே திராவிடர் கழகம் எதிர்த்தது. அவர்களும் (கம்யூனிஸ்ட்டுகள்) எதிர்த்தனர். நாமும் எதிர்த்தோம். நாம என்னமோ கை மூடி இல்லை.நேரடியாக தொழிற்சங்கத்திற்கு வந்த பின்பு எல்லாப் போராட்டங்களையும் எதிர்கொள்ள வேண்டி யிருந்தது. கூலி, குத்தகை, அவர்களின் வாழ்க்கைத்தரம், அவர்களுக்கு கல்வி போதிப்பது என. திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் என விடுதலையில் சின்ன புத்தகம் போடப்பட்டது. அதில் என்ன கொள்கை என சுருக்கமா பெரியார் சொல்வார். கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்து கொடுத்தார். முதல் பலன் கம்யூனிஸ்ட் கட்சியால சாதிக்க முடியாததை, அவர்கள் இவ்வளவு காலம் போராடியும் செய்யமுடியாததை இராஜாஜி ஆட்சி காலத்தில் பெரியார் ஒரு சாதனை செய்தார். **'தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்'** பண்ணையாளுக்கு எந்த பாதுகாப்பும் கிடையாது. அவன் காலையில் வேலைக்கு போவான். மறுநாள் வேலைக்கு போனால் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். அவனுக்கு எந்த பாதுகாப்பும் கிடையாது. அவனுக்கு ஒரு காம்பென்சேசன் கொடுக்கனும் என்று அந்த சட்டத்தில் வந்தது. அது ஒரு பெரிய பாதுகாப்பாக பண்ணையாளுக்கு வந்தது. அது நம்ம டிமாண்ட்ல கிடைத்தது. நமது போராட்டத்தால் கிடைத்தது...

இங்கு நாகப்பட்டிணத்தில் திராவிடர் விவசாய தொழிலாளர் மகாநாடு 1954 ல் நடத்தினோம். திராவிடர் கழக மாநாடு என இரண்டுநாள் சனி, ஞாயிறு என இரண்டுநாள் டிக்கெட் போட்டு நடத்தினோம். வந்த அனைவருக்கும் சோறு போட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. நான் தான் செயலாளர். ஆர்.வி. கோபால் தலைவர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். **மாநாட்டு திறப்பாளராக டாக்டர் அம்பேத்கர் அவர்களை அழைத்தோம்.** அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. அவருடைய செயலாளர் ராஜ்போஜ் என்பவர் மாநாட்டை திறந்து வைத்தார். மாநாட்டில் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் பெரியாரும், ராஜ்போஜும் வந்தனர். பெரிய கோவில் உள்ளது. தேரெல்லாம் நிற்கிறது. ஊர்வலத்தில் வந்தவர்கள் கடவுள் பொம்மைகளை உடைத்தனர். ராஜ்போஜ் 'வாட் ஸ் திஸ்' என்கிறார். நான் பின்னால் வந்து கொண்டிருந்தேன். திஸ் ஸ் ஆல்சோ என்றேன் உடனே ராஜ்போஜ் 'கௌ திஸ் பாஸிபில்' என்கிறார். மாநாட்டில் அதைப்பற்றி ஆச்சிரியமாக பேசுகிறார். அவர் மிகவும் அதிர்ச்சியாக விட்டார். மாநாட்டில் பேசும் போது 'வடநாட்டில் இப்படி நடக்க வாய்ப்பே இல்லை. கோவில் முன்பு கடவுள் சிலைகள் உடைக்கப்படுகிறது. அதன்பிறகும் மாநாடு நடக்கிறது என ஆச்சரியமாக பேசினார். வடநாட்டில் இப்படி சிந்தித்து கூட பார்க்கமுடியாது. மாநாடு அமைதியாக நடக்கிறது. நானும் பேசிக் கொண்டிருக்கிறேன். வடநாடாக இருந்தால் மகாநாடு தீப்பிடித்து எரியாதா? என அவர் கொண்டுவந்த ட்ராப்ட்டை தாண்டி பேச ஆரம்பித்து விட்டார்.

அந்த மாநாட்டில் விவசாயிகளுக்குத் தேவையான தீர்மானங்கள் போடப்பட்டன. ***1952ல் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டது. விவசாய சங்கம் ஆரம்பித்து இந்த வெற்றி கிடைத்த பின்னால் கூட்டம் அதிகமாக கூட ஆரம்பித்து விட்டது. பலன் கிடைத்தால் தான் கூட்டம் கூடும். பலன் கிடைக்காவிட்டால் கூட்டம் கூடாதே.*** அதனால் குத்தகைதாரர்களுக்கு விவசாய சங்கம் பாதுகாப்பை ஏற்படுத்தியது. நீதிமன்றத்திற்கு போகும்போது கூட அட்வகேட் போகவேண்டும் என்பது இல்லை. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலும், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலும் ஒரு பெரிய விதிவிலக்கு என்னவென்றால் தொழிலாளர்களின் ரெப்ரசன் டேட்டிவா பேப்பரில் கையெழுத்து வாங்கி கொடுத்தால் போதும். என்னுடைய ரெப்பரசன்டேடிவா இவரை நியமிக்க வேண்டும்

என்று கேட்டுக்கொண்டால் அட்வகேட்டுக்கு தரக்குடிய மரியாதை அனைத்தும் கிடைக்கும். அப்ப நம்ம தொழிற்சங்க தோழர்கள், கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள், மற்ற தோழர்கள் வாதாடியுள்ளனர். நானே பல வழக்குகளில் வாதாடியுள்ளேன். பெரிய பெரிய வழக்குகள் கூட நடத்தப்பட்டுள்ளது.

ஏழை எளியவர்கள் வழக்கறிஞருக்கு பணம் கொடுக்க முடியாது. அந்த சட்டத்திற்கு பிற்பாடு மக்கள் மத்தியில் பெரிய செல்வாக்கு ஏற்பட்டது. ஆட்சி மாறி காமராசர் ஆட்சி வந்த பின்பு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஒரு பாதுகாப்புக்குத் தான். பண்ணையாளே இருக்கக்கூடாது என்பதுதான் நமது கொள்கை. இருந்தாலும் இருக்கிற முறைக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்று குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. **குத்தகை 40 சதவீதம் சாகுபடிக்காரனுக்கும், 60சதவீதம் முதலாளிக்கும் இருந்தது, ஆட்சி மாறி காமராசர் ஆட்சி வந்தவுடன் 60 சதவீதம் குத்தகைகாரனுக்கும் 40 சதவீதம் முதலாளிக்கும் என மாற்றம் வந்தது. அது ஒரு பெரிய பலன்.** என்ன விளையுதோ அதில் 60 சதவீதம் சாகுபடிகாரனுக்கு. அது ஒட்டு மொத்தமாக இவ்வளவுதான் என்ற கெஸ் பண்ணிக்கொன்டு ஒரு குத்தகையை நிர்ணயம் செய்து விடுவது. இப்ப நம்ம பூமியில 100 மூட்டை காணும்னு முடிவு பண்ணி 40 மூட்டை கொடுத்துவிடுகிறோம் என்று அக்ரிமென்ட் போட்டுக் கொள்வது என்று சட்டமே சொன்னது. **இது சட்டத்தோட பலன் தான் நான் சொல்வது. அந்த பலன்களை வைத்துப் பார்க்கும் போது நல்ல வளர்ச்சியிலதான் திராவிடர் விவசாய தொழிற் சங்கம் இருந்தது. நன்னிலம் தாலூகா, தஞ்சாவூர் தாலூகா, நாகபட்டிணம் தாலூகா, திருக்காட்டுபள்ளி, லால்குடி இங்கெல்லாம் ரொம்ப பலமாக இருந்தது.**

**கேள்வி: கீழ்வெண்மணி போராட்டங்கள் பற்றி சொல்லுங்கள்.**

**பதில்:** கீழ்வெண்மணி என்கிற ஊர் பக்கத்துல கீவளூர் பக்கத்துல ஒரு கிராமம். விவசாய போராட்டங்கள் தான். இந்த நாயுடுமாருங்க தான் எஜமானர்களா இருப்பாங்க. என்ன பண்ணிட்டாங்க சண்டையில வீடுகளை கொளுத்திவிட்டார்கள். வீடுகளுக்குள்ள சிக்கிக் கிட்டவங்கள்ள 50, 60 பேர் பக்கமா எரிஞ்சு கரிக்கட்டையா போயிட்டாங்க. பாடியெல்லாம்

> “ கம்யூனிஸ்ட் கட்சியால சாதிக்க முடியாததை, அவர்கள் இவ்வளவு காலம் போராடியும் செய்யமுடியாததை இராஜாஜி ஆட்சி காலத்தில் பெரியார் ஒரு சாதனை செய்தார். ‘**தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்**’

போய் பார்த்தோம். அண்ணா ஆட்சிக்கு வந்தவுடனே நடந்தது. அண்ணா ரொம்ப மனசு நொந்து போய்விட்டார். கொளுத்தி விட்டது நாயுடுகள் தான். கோபாலகிருஷ்ண நாயுடு என்பவர் தான். ஒரு முக்கிய சமாச்சாரம். அதைப்பற்றி விசாரிக்க ஒன் மேன் கமிஷன் போட்டிருந்தார் அண்ணா. **கணபதியா பிள்ளை கமிஷன்** என்று பெயர்.

தஞ்சாவூர்ல போய் சாட்சி சொல்கிறேன். திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் சார்பாக எவிடென்ஸ் பண்ணுறேன். நான் என்ன காய்ன் பண்றேன்னா -

“அய்யா, லேபர் யூனியன் எல்லாம் இருக்குது. அந்த லேபர் யூனியன்ல சம்பளம் கேக்குறாங்க, சம்பளம் உயர்த்திக் கேக்குறாங்க, போனஸ், அலவன்ஸ் கேக்குறாங்க. பி.எப் கேக்குறாங்க, வைத்திய வசதி கேக்குறாங்க. அங்கெல்லாம் கொளுத்தியா விடுறான். அவனெல்லாம் பெரிய, பெரிய கோடீஸ்வரன் ஆச்சே. முதலாளியெல்லாம் போராட்டம் பண்ணுறான், கதவை மூடுகிறான். சட்டம் வருது. அரசாங்கம் வருது, போலிஸ் வருது, நீதி மன்றம் வருது. காம்ப்ரமைஸ் நடத்துது. முடிஞ்சுபோச்சு. யாரும் கொளுத்தலையே, இங்க மாத்திரம் கொளுத்த வேண்டிய அவசியம் என்ன? அப்படின்னா அவன் தொழிலாளின்னு ரெககனைஸ் பண்ணவில்லை. நம்முடைய அடிமைகள் இப்படி கலகம் பண்ணுறாங்களே அப்படின்னு மானப்பிரச்சனையா எடுத்துக்கிட்டான். அப்ப பெரியார் சொன்ன ஜாதி ஒழிப்பு பிரச்சாரம் தான் அரசாங்கம் செய்யனும்.” என்றேன்.

கணபதியா பிள்ளைக்கு கோபம் வந்தது. “இப்ப ஒரு டாலர் ஒன்னு கொடுக்கிறாரே கலப்பு திருமணத்திற்கு அத போட்டு ஆட்டிக்கிட்டு இருந்தா ஜாதி ஒழிப்பு வருமா?” என்றார். அப்ப கணபதியாபிள்ளை என்கிற ஜஸ்டிஸ் நம்மவிட

**மாநாட்டில் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் பெரியாரும், ராஜ்போஜும் வந்தனர். பெரிய கோவில் உள்ளது. தேரல்லாம் நிற்கிறது. ஊர்வலத்தில் வந்தவர்கள் கடவுள் பொம்மைகளை உடைத்தனர்.**

பாஸ்ட்டா இருக்காருன்னு அர்த்தம். எங்கெல்லாம் பெரியார் கருத்துக்கள் போயிருக்கு பாருங்க. அதாவது அவர் பார்வைக்குள்ள கருத்தை நான் சொல்லிட்டேன். இத கவர்மெண்ட் செய்யனும்னு சொல்லும்போது கவர்மெண்ட்ட சார்ஜ் பண்ணுகிறார். சார்ஜ் பண்ணும்போது அண்ணா கலப்புதிருமணம் புரிந்தவர்களுக்கு டாலர் தருகிறார். டாலர் கொடுத்தா சாதி ஒழிந்துருமா? என்றார்.

கீவளூருக்கு பெரியார் வந்திருக்கிறார். கோபால கிருஸ்ண நாயுடு ஐகோர்ட் பெயில வந்திருக்கார். நாயுடு என்கிட்ட வந்து பெரியார் கிட்ட ஒரு இன்டர்வியூ வாங்கிக்கொடு என்று கேட்கிறார். என்னய்யா கேட்கிறது? என்றேன். அவர்கிட்ட. நான் தவறே செய்யலை, அக்கியூஸ்ட்டா மாட்டிக்கிட்டேன். ஒரு பெரிய மனுசன் அவர் கிட்ட மனசு திறந்து நான் கண்ணீர் விட்டு அழுதா போதும். எனக்கு பாவ விமோசனம் கிடைக்கும். அவரை விட பெரிய மனுசன் எனக்கு யார் இருக்கா? ஒரு இண்டர்வியூ வாங்கிக்கொடு என்று கேட்கிறார். வாசல்ல நிற்கிறார். உள்ளே பெரியார் இருக்கிறார். நான் உள்ளே போய் சொன்னேன். பெரியார் " என் கிட்ட என்ன சொல்ல நினைக்கிறாரோ அத கோர்ட்ல சொல்லச் சொல்லு. அவரையெல்லாம் பார்க்கவே பிடிக்கலை. அவரை கண்ணாலே பார்க்க விருப்பமில்லை. போ. போ. போகச் சொல்லு" என்றார். ஏன்டா நாம போயி சொன்னோம்னு ஆகிடுச்சு. அய்யாவுக்கு உடம்புக்கு சரியில்லை. அவரை பார்க்க விரும்பாதீங்கன்னு சொல்லி அனுப்பினேன். அந்த அக்கியுஸ்ட்ட கண்ணால கூட பார்க்க விரும்பவில்லை.

**கேள்வி: பெரியார் நடவடிக்கை ஒன்றும் இல்லை என்று குற்றச்சாட்டு வருகிறதே?**

**பதில்:** சர்க்கார் நடவடிக்கை எடுக்குது. அக்கியூஸ்ட்ட தண்டிக்குது. பெரியார் என்ன பண்ணுவார். பெரியார் அவங்களை ஆதரித்தாரா?. இல்ல போராட்டத்திற்கு எதிராக இருந்தாரா? அக்கியூஸ்ட்ட கூட பார்க்க மாட்டேங்கிறாரு. அக்கியூஸ்ட் கண்ணீர் விட்டு அழுகிறான். கீவளூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் தான் தங்கியிருந்தார். தங்கியிருக்கும் போது வாசலில் இந்த நிகழ்ச்சி நடக்குது. அந்த அக்கியூஸ்ட். எப்படியாவது ஒரு இன்டர்வியூ வாங்கிக்கொடு. நான் செய்யலை, நான் அக்கியூஸ்ட் இல்ல என்று அவர்கிட்ட கண்ணீர் விட்டு அழுகனும். நமஸ்காரம் பண்ணிட்டு வந்துறேன்னு கேட்டார். இன்டர்வியூ தரலை. நம்ம வந்து அதுக்கு எதிரிடையா போகலையே. கமிஷன்ல எவிடன்ஸ் சொல்லியிருக்கிறோம்.

**கேள்வி: தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் கேள்வி கேட்கிறது?**

**பதில்:** காரணம் என்னான்னு கேட்டிங்கன்னா தாழ்த்தப்பட்டவர்களிடம் இருந்த பிடிப்பு நம்மிடம் குறைந்து விட்டது. நம்ம கொடி சேரியில பறந்தது. இப்ப நம்ம கொடி சேரியில பறந்தா கேட்ப்பார்களா நம்மை?

ஒரு சம்பவம் ஒரு தேர்தல்ல ஜீவானந்தம் இங்க நிக்கிறாரு. என்.எ. இராமலிங்கம் காங்கிரசில் நிற்கிறார். என்.எ.இ ராமலிங்கத்தை நாம ஆதரிக்கிறோம். இந்த திருக்குவளை கலைஞர் ஊர். இங்கு பூத் எரிஞ்சு போச்சு. அங்க மட்டும் பை-எலக்சன். எல்லா தலைவர்களும் வந்திருக்காங்க. ஒரு பூத் எலக்செனுக்கே பாவலர் பாலசுந்தரம் உட்பட எல்லா தலைவர்களும் வந்திருக்காங்க. சேரிக்கு காங்கிரஸ் காரங்க ஓட்டு கேட்டு போனா சேரிக்குள் உள்ளே விடமறுக்கிறார்கள். சேரிக்கு நீ எப்ப வந்தே இப்ப ஓட்டு கேட்டு வர்றியே அப்டின்னு மறுக்கிறார்கள். ரொம்ப கஸ்டமா போயி எங்கிட்ட வந்து சொன்னாங்க.

நாங்க 10, 15 பேர் கருப்பு சட்டையை போட்டுக் கிட்டு போனோம். யாரப்பா காங்கிரஸ்காரங்களை உள்ள விடமாடேன்னுது? என்று கேட்டா, காங்கிரஸ்காரனத்தான் உள்ளே விட மாட்டோம்னு சொன்னமே தவிர உங்களைத் தடுக்கலையே? நீங்க போய் வீட்டுக்கு வீடு கேளுங்க. உங்க ஊர் பெண்கள் வாக்கப்பட்டு இங்க இருக்கு. எங்க ஊர் பையன்கள் வாக்கப்பட்டு உங்க ஊர்ல இருக்காங்க. நீங்க எப்பவும் வர்ரவங்கதானே. நீங்க கேளுங்க வீட்டுக்குவீடு.


நம்மள அவர்கள் மறிக்கலை. காரணம் நம்ம கொடி அங்க பறந்திச்சு. என்னை உள்ள விடுகிறார்கள். காங்கிரசுக்கு ஓட்டுக் கேட்க. ஆனால். காங்கிரசுக்காரனை விட மாட்டேன் என்றார்கள். நம்ம கொடி இன்னைக்கு அங்கே பறக்கவில்லை. அதனால்தான் கேள்வி கேட்கிறார்கள்.




இது, தலித்துகளுக்கு மட்டுமான பத்திரிகை அல்ல; ஜாதி ஒழிப்பை முன்னிருத்தி – சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துடனான சமூகத்தை உருவாக்குபவர்களுக்கான போர்க்களம்.

ஆண்டுக் கட்டணம்: ரூ. 150/–
வாழ்நாள் கட்டணம்: ரூ. 1500/–

எஸ்–5, மகாலட்சுமி அடுக்ககம், 26/13, குளக்கரை சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
பேசி: 044 – 2822 1314




புரட்சிப் **பெரியார் முழக்கம்**
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dravidarviduthalaikazhagam.org

## ஆண்டு சந்தா: ரூ.200/–
## அய்ந்தாண்டு சந்தா: ரூ.1000/–

95, டாக்டர் நடேசன் சாலை, டாக்டர் அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை –600 004.
தொடர்பு எண்: **99416 13535**






ஜாதி மறுப்புத் திருமணங்களை செய்து வைத்ததால், ஜாதி வெறியர்களால் தாக்கப்பட்டு, வழக்கையும் சந்தித்து இரண்டாண்டுகளுக்குப் பின் விடுதலையான மேட்டூர், காவலாண்டியூர் தி.வி.க தோழர்கள்

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்**

காட்டாறு, 1 / 810, முத்தமிழ்நகர், நத்தம் சாலை, திண்டுக்கல்-624003. kaattaaru2014@gmail.com